1190

APPROVED TEXT-BOOK.

# TAMIL
## DIRECT METHOD
# THIRD BOOK

## நேர் முறை
# மூன்றாம் புத்தகம்

BY

Y. G. BONNELL, P. B.,
*Author of "Paradise Bird Series"*

21 AUG 1931

*"Nisi Dominus frustra."*
*"Apart from Me ye can do nothing."*

S A

Y. G. BONNELL. P. B

**SECOND EDITION**

MADRAS :
...ting Works, 150, Anna Pillai Street,
...AUGUST, 1931.
...Rights Reserved.

[விலை : அணா 4.

TB
031,6/31
N31
128128

APPROVED TEXT-BOOK.

# TAMIL
## DIRECT METHOD
# THIRD BOOK

31 AUG 1931

## நேர் முறை
# மூன்றும் புத்தகம்

BY

Y. G. BONNELL, P. B.,

*Author of "Paradise Bird Series"*




**SECOND EDITION**

MADRAS:
Printed by Kesari Printing Works, 150, Anna Pillai Street,
5TH AUGUST, 1931.

*All Rights Reserved.*

Price: 4 Annas.] [விலை: அணு 4.

# A FEW HINTS.

1. This **Third Book** is intended to be used as a **Text Book** in the **Third Standard** and it is to follow my **Second Book**. In schools where my books are not used this may be used as a Second Reader in the **Fourth Standard.**

2. The **Direct Method** used in this book will help pupils to converse freely and write simple composition. The teacher ought to have these two ends in view and speak with them during class hours and out of class hours, enlarging their Vocabulary and receiving answers in complete sentences.

3. The remarkable feature peculiar to this book as well as to its predecessors is that it teaches how to write correctly. Pupils who use this book do not require Copy Books to learn the art of writing. The teacher ought to observe where the pupils begin the letters from and where they end them while writing.

4. The teacher ought to take pains to teach his pupils to pronounce letters, short and long, soft and hard, &c., correctly and to read the lessons in a natural conversational tone with due regard to punctuation. Dictation should be regularly done—a few sentences at a time will do. Not only spelling but also handwriting ought to be valued.

5. A Reader is a very good medium for imparting moral teaching and this book is in truth a **Moral Class Book.** The teacher ought to endeavour to make the pupils not only literate but also good **Citizens.**

PARADISE LODGE, ROYAPURAM, 5th *May*, 1926. — Y. G. BONNELL, P.B.

1352
494 – 81186

## பாலியர்க்குரிய பஞ்ச லக்ஷணங்கள்.

இராகம் : பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

பாலியர்க்கேற்ற பஞ்சலக்ஷணம்
பகரக்கேளீர் நல்ல பாலரே.

சரணங்கள்.

1. கீழ்ப்படியவேண்டும் கீழிருப்போரெல்லாம்;
வாழ்ந்திருக்கவழி பாலரே.— பாலி.

2. உண்மை பேசவேண்டும் உள்ளபடி என்றும்,
கஷ்ட நஷ்டத்திலும் பாலரே.— பாலி.

3. பட்சம் பாராட்டுங்கள் பிராணி, பிறர்க்கும்;
பரிதபியுங்கள் பாலரே.— பாலி.

4. ஜாக்கிரதை வேண்டும் சிறு பிள்ளைகட்கு;
சோம்பலுதவாது பாலரே.— பாலி.

5. புனிதம் சிரேஷ்டம் பிள்ளைகளெல்லோர்க்கும்;
பரிசுத்தம் தேவை பாலரே.— பாலி.

6. பஞ்ச லக்ஷணங்கள் படைக்கக் கடவுள்
தஞ்சமடையுங்கள் பாலரே.— பாலி.

PARADISE LODGE,
*17th April* 1926. } Y. G. BONNELL, P. B.

# பொருளடக்கம் (Contents).


| பாடம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | தலைமாணாக்கர் ... ... ... | 1. |
| 2. | இடைமாணாக்கர் ... ... ... | 4. |
| 3. | கடைமாணாக்கர் ... ... ... | 6. |
| 4. | மூவகைப் பொருட்கள் ... ... | 9. |
| 5. | மூன்று வர்க்கங்கள் ... ... | 12. |
| 6. | சரீரத்தின் பிரிவுகள் ... ... | 13. |
| 7. | சுத்தம் சுகத்துக்கு ஆதாரம் ... ... | 16. |
| 8. | வண்ணாத்திப்பூச்சி ... ... | 19. |
| 9. | மிருகக்காட்சி சாலை ... ... | 22. |
| 10. | மயில் ... ... ... | 25. |
| 11. | மச்சக் காட்சி சாலை ... ... | 28. |
| 12. | பலபொருட் காட்சி சாலை ... ... | 30. |
| 13. | தொட்டாற்சுருங்கி ... ... | 32. |
| 14. | குதிரைகளின் காதுகள் ... ... | 34. |
| 15. | பிள்ளைகளுக்கு உரிய ஐந்து லக்ஷணங்கள் ... | 36. |
| 16. | பேராசை தரித்திரம் ... ... | 38. |
| 17. | மதுபானம் விஷபானம் ... ... | 39. |
| 18. | அது என்தகப்பனாரை வருத்தப்படுத்தும் ... | 41. |
| 19. | கிரேஸ் டார்லிங் என்ற சுத்த வீரி ... | 42. |
| 20. | தங்கப்பிரமாணத்தைக்கைக்கொண்டசிறுவன் | 44. |
| 21. | வினோத மேல்விலாசமும் வினோத கடிதமும் | 47. |
| 22. | உலோபி ... ... ... | 49. |
| 23. | ஊதாரி ... ... ... | 51. |
| 24. | உதாரி ... ... ... | 53. |
| 25. | பர்நெல் அம்மாள் ... ... | 55. |
| | செய்யுள் : மூதுரை ... | 57. |
| | ஷை நல்வழி ... | 59. |

*Paradise* *Bird.*

*" Nisi DOMINUS* *frustra".*

## நேர் முறை

# மூன்றும் புஸ்தகம்.

### பாடம் 1. தலைமாணாக்கர். க.

மாணாக்கரை எத்தனை வகுப்புகளாகப் பிரிக்கலாம்? எங்கள் பள்ளிக்கூடத்தில் மாணாக்கரை எட்டு வகுப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

ஆம், படித்திருக்கிற அளவையும், வருஷக் கணக்கையும் பார்த்து இப்படிப் பிரித்திருக்கிறார்கள்; ஆனால், படிக்குந் தன்மையைப் பார்த்து அவர்களை எப்படிப் பிரிக்கலாம்? நல்ல மாணாக்கர், கெட்ட மாணாக்கர் என்று பிரிக்கலாம்.

நீ சொல்வது சரிதான். நல்ல மாணாக்கர் எப்படி இருப்பார்கள்? கரும்பைப்போல இனிப்பாய் இருப்பார்களோ? கெட்ட மாணாக்கர் வேம்பைப்போல் கசப்பாய்

இருப்பார்களோ? அல்ல, நல்ல மாணாக்கர் பாடங்களை நன்றாய்ப் படிப்பார்கள். கெட்ட மாணாக்கர் சோம்பலாய் இருப்பார்கள்.

நான் மாணாக்கரை தலை, இடை, கடை என்ற மூன்று வகுப்புகளாய்ப் பிரிக்கிறேன்; தலை மாணாக்கர் என்றால் அருத்தம் என்ன? தலைக்குள் இருக்கும் மூளை புத்திக்கு ஆதாரமாகையால், தலை மாணாக்கர் என்றால் புத்தியுள்ள மாணாக்கர் என்று அருத்தம்.

ஆம், அவர்கள் புத்தியுள்ளவர்கள் தான்; "எண் ஜாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்" அல்லவா? தலை மாணாக்கர் என்றால் சிரேஷ்ட மாணாக்கர், அல்லது முதல் மாணாக்கர் என்பது பொருள். இவர்களை எதற்கு ஒப்பிடலாம்?

ஏன் திகைக்கிறீர்கள்? இது என்ன படம்? இது அன்னப் பட்சியின் படம்.



அன்னப் பக்ஷியைப்பற்றி என்ன பேசிக்கொள்கிறீர்கள்? அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்து பாலை மாத்திரம் குடிக்குமாம்.

தலை மாணாக்கர் அன்னத்தைப்போல் பாடத்திலுள்ள நல்லவைகளைக் கற்றுக்கொண்டு, சாரமற்றவைகளைத் தள்ளி விடுவார்கள். அவர்களை வேறே எதற்கும் ஒப்பிடலாம்?

இங்கே ஒரு பசுவின் படம் இருக்கிறது; தலை மாணக்கரை பசுவுக்கும் ஒப்பிடலாம் என்று நினைக்கிறோம்.



ஆம், தலை மாணக்கரை பசுவுக்கும் ஒப்பிடலாம். பசு மேய்ச்சல் தரையிலிருக்கையில் வயிறு நிரம்பப் புல்லை மேய்ந்து, குளிர்ந்த ஜலத்தைக் குடித்து, கட்டுத் தரைக்குப் போனபின் மேய்ந்த புல்லைக் கக்கி, அசைப் போட்டு அரைத்துக்கொண்டே இருந்து நமக்கு மதுரமான பாலைக் கொடுக்கிறது; அப்படியே, தலை மாணக்கன் பள்ளிக் கூடத்தில் பாடத்தைப் படித்து, உபாத்தியாயர் வாயிலிருந்து புறப்படும் சிறந்த வார்த்தைகளைக் கேட்டு நோட் புஸ்தகத்தில் எழுதிக்கொள்வான்; பின்பு வீட்டுக்குப் போய், படித்ததை மறுபடியும் படித்து, கேட்டதைச் சிந்தித்து, கல்வியில் தேர்ந்து பிறருக்குப் பிரயோஜனமுள்ள மனுஷன் ஆவான். நீங்கள் அன்னப்பக்ஷியைப்போலவும், ஆ என்று சொல்லப்படும் பசுவைப் போலவும் இருக்கிறீர்களா?

கையெழுத்து அப்பியாசம்.

=அன்னத்தைப்=போலவும்=ஆவைப்=
=போலவும்=இருக்கிற=மாணக்கர்=தலை
=மாணக்கர்=

## 2. இடை மாணுக்கர்

குறிப்பு:—கீழே அளவு கடந்து போகிற எழுத்துகளையும், மேலே அளவு கடந்துபோகிற எழுத்துகளையும், ஒரே அள வான எழுத்துகளையும் கவனித்து எழுதவேண்டும்.

'அ, த, வு, ஆ, ரு, இ, ற, ஞு'—என்ற எழுத்துகள் கீழ்க் கோட்டுக்குக் கீழே அளவு கடந்து போகின்றன.

'ே, இ, கி, லை'—என்ற எழுத்துகளும், மெய்யெழுத்துகள் மேல் இருக்கும் புள்ளிகளும் மேற்கோட்டுக்கு மேலே போகின் றன.

'இ'—என்ற எழுத்து மேலுங் கீழும் அளவு கடந்து செல்லு கிறதையும், 'ன, ல, வ' முதலிய எழுத்துகளின் சுழிகள் கீழ்க் கோட்டிலிருந்து துவங்குவதையும், 'த, க, ச' என்ற எழுத்துக ளின் விலாக்கள் புடைத்திருப்பதையுங் கவனிக்க.

### பாடம் 2. இடை மாணுக்கர். உ.

இடை மாணுக்கர் என்றால் அருத்த மென்ன? இடை என்றால் இடுப்பு அல்லது அரை என்று அருத்தம்; இடை மாணுக்கர் என்றால் அருத்தம் தெரியவில்லை.

இடை என்றால் இடுப்பு என்பதும் அரை என்பதுஞ் சரிதான். நமது இடுப்பு நமது சரீரத்தில் பாதி அல்லது அரைவாசிதான்; நமது கால் கால்வாசிதான்; நமது இடை யை நமது சரீரத்தின் மத்தி என்று சொல்வது சரியாய்ப் பொருந்தும். இடை மாணுக்கர் என்பதற்கு அருத்தம் இப் போது தெரிகிறதா? ஆம் ஐயா, இடை மாணுக்கர் என்றால் அவர்கள் அரைவாசிதான் மாணுக்கர், பாதிநேரம் படிக்க மாட்டார்கள்; அவர்களை முழுமாணுக்கர் என்று சொல்ல முடியாது, அரைமாணுக்கர் என்றுதான் சொல்லவேண்டும்.

இடைமாணுக்கர் தலை மாணுக்கரைப்போல் சிரேஷ்டர்கள் அல்ல; ஆனல் இவர்கள் படிப்பு விஷயத்தில் கனிஷ்டர்களுமல்ல; இவர்களை மத்திம மாணுக்கர் அல்லது நடு மாணுக்கர் என்று சொல்லலாம். இவர்களை எதற்கு ஒப்பிடலாம்?

யோசித்துச் சொல்ல முடியாதா? நிலம் தானுகவே பலன் தருமா? உழவர் நிலத்தை என்ன செய்கிறுர்கள்? உழவர் நிலத்தை உழுது, அதற்கு எரு போட்டு, நீர் பாய்ச்சி, களை பிடுங்கி உழைக்கிறுர்கள்; இப்படிச் செய்யா விட்டால் நிலம் பலன் தராது.

இப்போது சொல்லுங்கள், இடை மாணுக்கரை எதற்கு ஒப்பிடலாம்? இடை மாணுக்கரை நிலத்துக்கு ஒப்பிடலாம்; ஏனென்றுல் அவர்கள் உபாத்தியாயர் கற்பிக்கும் முயற்சி அளவுக்குத்தக்க கல்வி அறிவைக் காட்டுவார்கள்.

இடை மாணுக்கரை இன்னும் எதற்கு ஒப்பிடலாம்? இங்கே ஒரு கிளிப்படம் இருக்கிறது; அவர்கள் கிளிக்கும் ஒப்பென்று சொல்லப் போகிறீர்களோ, ஐயா?



கற்றுக் கொள்ளுகிற விஷயத்தில் கிளிப்பிள்ளையின் தன்மை என்ன? சொல்லிக்கொடுக்கிறதை மாத்திரம் கிளி

கற்றுக்கொள்ளும்; ஆகையால் "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்ற ஒரு பழமொழியும் வழங்குகிறது. உபாத்தியாயர் படும் பிரயாசத்துக்குத் தக்கதாய்ப் படிக்கிற மாணுக்கரை கிளிப்பிள்ளைக்கு ஒப்பிடுவது சரிதான்.

நீங்கள் நிலத்தைப் போலவும், கிளியைப் போலவும் இருந்து, உபாத்தியாயர் கற்றுக்கொடுக்கிறதை எல்லாங் கற்று, இடைமாணுக்கர் என்ற பேராவது பெறுகிறீர்களா?

கையெழுத்து அப்பியாசம்.

=மண்ணைப்=போலவும்=கிளியைப்=
=போலவும்=இருக்கிற=மாணுக்கர்=இடை=
=மாணுக்கர்=

குறிப்பு:—'வு, இ, ற, ணு'—என்ற எழுத்துகள் கீழ்ப்பக்கம் அளவு கடந்து செல்லுகின்றன.

'ணை, பே, கி, ளி, இ,'—என்ற எழுத்துகள் மேற்பக்கம் அளவு கடந்து செல்லுகின்றன.

'இ'—என்ற எழுத்தைக் கவனி, அது மேலுங் கீழும் அளவு கடந்து செல்லுகிறது, அதன்சுழி மேற் சுழியாதலால் மேற் கோட்டிலிருந்து துவங்குகிறது.

## பாடம் 3. கடை மாணுக்கர். ௩.

கடை மாணுக்கர் என்று யாரை அழைக்கலாம்? கடைகளுக்குப்போய், தின்பண்டங்கள் வாங்கித் தின்று கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் பிந்தி வருகிற மாணுக்கரை கடை மாணுக்கர் என்று சொல்லலாம்.

கடைக்குப்போய் பாடசாலைக்குக் கடைசியாய் வருகிறவர்களை கடை மாணுக்கர் என்று சொல்லலாம்; ஆனால் இங்கு என் கருத்து அதுவல்ல. தலை மாணுக்கர் முதல் மாணுக்கர், இடை மாணுக்கர் நடு மாணுக்கர், கடை மாணுக்கர் நமது கால்போல் கடைசி மாணுக்கர். ஒட்டைக்குடம் பார்த்திருக்கிறீர்களே, அதில் ஜலம் விட்டால் என்ன நேரிடும்? தூரில் ஒட்டை இருந்தால் குடத்தில் ஊற்றின ஜலமெல்லாம் க்ஷணத்தில் வடிந்து போகும்; விலாவில் ஒட்டை இருந்தால் அரைக் குடம் வெறுமையாய் இருக்கும்.

இப்போது கடை மாணுக்கர் யார்என்று தெரிகிறதா? ஆம், ஆசான் கற்பித்ததை எல்லாம் மறந்துவிட்டு, ஒட்டைக் குடத்தைப்போல் வெறுமையாய்ப் பள்ளிக்கூடத்துக்கு வருகிறவர்கள் கடைமாணுக்கர்.



கடை மாணுக்கரை வேறு எதற்கும் ஒப்பிடலாம்? வெள்ளாட்டுப் படத்தைப் பார்க்கிறேம்; கடை மாணுக்கரை எப்படி வெள்ளாட்டுக்கு ஒப்பிடலாம், ஐயா?

மேய்கிற விஷயத்தில் வெள்ளாட்டின் தன்மை என்ன? அது ஒரு இடத்தில் நின்று மேயாது; "தூரத்துப் பச்சை கண்ணுக்கு இனிமை" என்றாற்போல் செடிக்குச் செடி

ஓடி, வயிறு நிரம்பமேயாமல் வீட்டுக்குத் திரும்பும். அது போல் ஒரு பள்ளிக்கூடத்தில் நிலையாய் இருந்து படியாமல், பள்ளிக்கூடத்துக்குப் பள்ளிக்கூடம் ஓடி, "பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்'' என்றபடி ஒரு பரீட்சையிலும் தேறாத மாணுக்கரை வெள்ளாட்டு மாணுக்கர் என்று சொல்லவேண்டும்.

எருமை குளத்திலுள்ள நீரை எப்படிக் குடிக்கும்? எருமை எப்போதும் தெளிந்த ஜலத்தைக் கலக்கியே குடிக்கும்.

அன்புள்ள ஆசிரியர் மனதை வருத்திக் கலங்கச்செய்யும் மாணுக்கனை எருமைக்கு ஒப்பிடுவதும், அவனைக் கடை மாணுக்கர் வகுப்பில் சேர்ப்பதும் நியாயமல்லவா? ஆம் ஐயா, அவனை எருமைக்கடா மாணுக்கன் என்றுதான் சொல்லவேண்டும்.

நெய்யரியில் நெய்யைவிட்டால் என்ன சம்பவிக்கும்? நல்ல நெய்யை ஒழுகவிட்டு, ஈ, கல், இலை முதலிய கழிவுகளைப் பிடித்துக்கொள்ளும். கடை மாணுக்கர் ஜல்லடைக்கும் ஒப்போ ஐயா?

ஆசான் சொன்ன நற்பொருள்களை மறந்து தீப்பொருளைப் பற்றிக்கொள்ளும் மாணுக்கரை நெய்யரிக்கு ஒப்பிடுவது நியாயம். எந்த நான்கும் கடை மாணுக்கருக்கு உவமையாயின? இல்லிக்குடம், வெள்ளாடு, எருமை, நெய்யரி—இந்த நான்கும் கடை மாணுக்கருக்கு உவமை.

உங்களில் யாராவது இவைகளுக்கு ஒப்பாயிருந்து கடை மாணுக்கர் என்கிற பெயருக்கு உரித்தாய் இருக்கிறீர்களா?

## கையெழுத்து அப்பியாசம்.

=இல்லிக்குடம்=ஆடு=எருமை=நெய்யரி=
=என்ற=நான்கைப்போல்=
=இருக்கிறவர்கள்=கடைமாணுக்கர்=

குறிப்பு:—'ட'-என்ற எழுத்து,'இ'-என்ற எழுத்தைப்போலவே அளவு கடந்து மேலுங் கீழும் போவதையும், கீழ்க் கோட்டுக்குக் கீழே போய் முடிவதையும், 'ரு, ணு'-ஆகிய எழுத்துகள் மேற்கோட்டுக்கு மேலே போகாதிருப்பதையுங் கவனி.

## மனப்பாடம் செய்யவேண்டியது.

அன்னம் ஆவே, மண்ணொடு கிளியே,
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி,
அன்னர் தலை, இடை, கடை மாணுக்கர்.

ஆ=பசு.
அன்னர்=ஒப்பவர்.

## பாடம் 4. மூவகைப் பொருட்கள். ச.

மூவகை மாணுக்கர் பெயர்களைச் சொல்லுங்கள். தலை மாணுக்கர், இடை மாணுக்கர், கடை மாணுக்கர் என்ற மூன்று பேரும் மூன்று வகுப்பு மாணுக்கராம்.

முப்பழங்கள் எவை? மா, பலா, வாழை என்ற மூன்று பழங்களும் முப்பழங்கள் என்று இரண்டாம் புத்தகத்தில் படித்தோம்.

மூவகைப் பொருட்கள் எவை? பொருட்களைப்பற்றி நாங்கள் இன்னும் படிக்கவில்லை ஐயா.

அடுப்பின்மேல் என்னத்தைப் பார்க்கிறீர்கள்? அடுப்பின்மேல் ஒரு சட்டியில் ஜலக்கட்டி வைத்திருக்கிறீர்கள் ஐயா.

என் வலது கையில் இருப்பது என்ன? என் இடது கையில் இருப்பது என்ன? உங்கள் வலது கையில் ஈயக் கட்டியும், இடது கையில் மண்ணாங்கட்டியும் இருக்கின்றன.

ஏன் இவைகளைக் கட்டிகள் என்று சொல்லுகிறீர்கள்? அவைகள் கெட்டியாய் இருப்பதால் அவைகளைக் கட்டிகள் என்று சொல்லுகிறோம்.

உறுதியாய் இருக்கும் கெட்டிப் பொருட்களை கட்டிப் பொருட்கள் என்று சொல்வது சரி. இந்த அறையில் இருக்கும் கட்டிப் பொருட்களில் சிலவற்றின் பெயர்களைச் சொல்லுங்கள். மேசை, நாற்காலி, புஸ்தகம், மைப்பெட்டி முதலியவைகள் கட்டிப் பொருட்கள்.

நான் அடுப்பில் நெருப்பை மூட்டுகிறேன்; என்ன சம்பவிக்கிறதென்று கவனித்துச் சொல்லுங்கள். சட்டியின் மேலிருந்த ஜலக்கட்டி உருகி ஜலமாகிவிட்டது.

முன்னே நீங்கள் கட்டிப்பொருள் என்று சொன்ன ஜலக்கட்டியை இப்போது என்ன பொருள் என்று சொல்ல வேண்டும்? கெட்டியாய் இருந்த ஜலக்கட்டி இப்போது ஜலமாக மாறி விட்டபடியால் இனி அதை ஜலப்பொருள் என்றுதான் சொல்லவேண்டும்.

நீங்கள் சொல்வது சரியே; இந்த அறையிலிருக்கும் ஜலப்பொருட்கள் சில சொல்லுங்கள். மைப்புட்டிக்குள்ளிருக்கும் மை, கூசாவுக்குள்ளிருக்கும் ஜலம் முதலியவைகள் ஜலப் பொருட்கள்.

அடுப்பில் நெருப்பு எரிந்து கொண்டேயிருக்கிறது; ஜலத்துக்கு என்ன நேரிடுகிறது என்று பாருங்கள். ஜல மெல்லாம் ஆவியாய் மாறி, கண்ணுக்குத் தெரியாமல் போய்விடுகிறது.

இப்படி ஆவியாக மாறின ஜலப்பொருளை என்ன பொருள் என்று சொல்லவேண்டும்? அதை ஆவிப்பொருள் என்றுதான் சொல்லவேண்டும்.

ஜலக்கட்டி ஜலமானதற்கும், ஜலம் ஆவியாக மாறின தற்கும் காரணம் என்ன? நெருப்புதான் காரணம்.

உஷ்ணம் அதிகப்பட அதிகப்பட கெட்டியாய் இருந்த ஜலக்கட்டி தளர்ந்து ஜலமாகவும், ஜலம் தளர்ந்து ஆவியாக வும் மாறிப்போயின. நமது சக்கரவர்த்தி வசிக்குமிடத்தில் பனிக்கட்டி பெய்கிறதாம்; பட்டணத்தில் ஜலத்தை ஜலக் கட்டியாகச் செய்கிறார்கள்; நமது குழம்புச் சட்டியின்மேல் கவிழ்த்தியிருக்கும் சட்டியிலிருந்து ஜலம் சொட்டுச் சொட் டாய் விழுகிறது; இவைகளுக்குக் காரணமென்ன? நமது சக்கரவர்த்தி வசிக்கும் தேசம் குளிர்ச்சியானதால் பனி கட்டிப்போகுமாம், சில குளிர் மிகுந்த தேசங்களில் சமுத்திர ஜலம் கட்டிப்போவதால் பிள்ளைகள் அதின்மேல் ஓடி விளையாடுவார்களாம், குழம்பு ஆவியாக மாறி மேலேறும்போது குளிர்பட்டு ஜலமாக விழுகிறதாம், ஜலத் தைக் குளிர்ச்சியாக்குவதால் ஜலக்கட்டி செய்கிறார்களாம் என்று பெரிய பள்ளிக்கூடத்தில் படிக்கிற என் அண்ணன் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

கையெழுத்து அப்பியாசம்.

பூமியில் உள்ள பொருட்களையெல்லாம்
கட்டிப்பொருள் ஜலப்பொருள்
ஆவிப்பொருள் என்னும் மூவகைப்
பொருட்களாகப் பிரிக்கலாம்.

## பாடம் 5. மூன்று வர்க்கங்கள். ரு.

வர்க்கங்கள் என்றால் வகுப்புகள் என்று அருத்தம். மனுஷன், பொன், மரம், ஆடு, இரும்பு, செடி, புறா, உப்பு, காளான்—இவைகளை மூன்று வகுப்புகளாகப் பிரியுங்கள். மனுஷன், ஆடு, புறா ஒரு வகுப்பு; பொன், இரும்பு, உப்பு இன்னொரு வகுப்பு; மரம், செடி, காளான் மற்றொரு வகுப்பு.

மனுஷன், ஆடு, புறா—இம்மூன்றையும் ஏன் ஒரு வகுப்பில் போட்டீர்கள்? இவைகள் மூன்றுக்கும் உயிர் உண்டு மற்றவைகளுக்கு உயிர் இல்லை.

ஜீவனுடைய மனுஷன், ஆடு, புறா, முதலியவைகள் என்ன வர்க்கம் என்று சொல்லலாம்? இவைகளை ஜீவ வர்க்கம் என்று சொல்லலாம்?

மரமும் பொன்னும் ஒரே வர்க்கம் என்று சொல்லலாமா? சொல்லப்படாது; மரம் வளரும், பொன் வளராது.

மரம், செடி, காளான் முதலியவைகளை என்ன வர்க்கம் என்று சொல்லவேண்டும்? மரவர்க்கமென்று சொல்லலாம்.

தாவர வர்க்கம் என்று சொல்வது சிறப்பு. தாவர வர்க்கங்களுக்கும் ஓர் வகை ஜீவன் உண்டு; ஆனல் ஜீவ வர்க்கங்களுக்கு இருக்கும் ஜீவனைப்போன்ற ஜீவனல்ல.

பொன், வெள்ளி, இரும்பு முதலியவைகளுக்குப் பொதுப் பெயர் என்ன? இவைகளுக்கு லோகங்கள் என்று பெயர்.

அப்படியானல் இவைகள் என்ன வர்க்கம் என்று சொல்லலாம்? இவைகள் லோக வர்க்கம் என்று சொல்லலாம்.

பூமியில் உள்ளவைகள் எல்லாவற்றையும் ஜீவ வர்க்கம், தாவர வர்க்கம், லோக வர்க்கம் என்ற மூன்று வகுப்புகளாய்ப் பிரிக்கலாம் என்ருல், கல்லை எந்த வர்க்கத்தில் சேர்ப்பீர்கள்? கல்லுக்கு ஜீவனில்லை, ஆதலால் அது ஜீவ வர்க்கத்தைச் சேராது; அதற்கு மரத்துக்குரிய ஜீவனுமில்லை, வளர்ச்சியுமில்லை, ஆதலால் அது தாவர வர்க்கத்தையுஞ் சேராது; அது லோக வர்க்கத்தைத்தான் சேர வேண்டும்.

கையெழுத்து அப்பியாசம்.

=பூமியிலுள்ள=எல்லாவற்றையும்=
=ஜீவவர்க்கம்=தாவரவர்க்கம்=
=லோகவர்க்கம்=என்ற=மூன்று பெரிய=
=வகுப்புகளாகப்=பிரிக்கலாம்=

### பாடம் 6. சரீரத்தின் பிரிவுகள். சா.

நமது சரீரத்தில் எல்லா அவயவங்களுக்கும் மேலே இருப்பது எது? என் தலைதான் எல்லாவற்றிற்கும் மேலே இருக்கிறது.

## 6. சரீரத்தின் பிரிவுகள்.

நமது உறுப்புகள் எல்லாவற்றிலும் தலையே முக்கியமானது என்று காட்டும் பழமொழி எது? "எண் ஜாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்" என்ற பழமொழியை முதற் பாடத்திலேயே கற்றுக்கொடுத்தீர்கள், ஐயா.

எது ஜாண்? எது முழம்? எத்தனை ஜாண் கொண்டது ஒரு முழம்? சுண்டுவிரலையும் பெருவிரலையும் இப்படி அகல விரித்தால் ஒரு ஜாண் ஆகும்; முழங்கை நுனியிலிருந்து சுண்டுவிரல் நுனிவரைக்கும் ஒரு முழமாகும். இடது கை முழத்தை வலது கை ஜாணால் அளந்தால் இரண்டு முறை அளக்கவேண்டியதாய் இருக்கிறது; ஆகையால் ஒரு முழம் இரண்டு ஜாண் என்று சொல்லவேண்டும்.

தலையை என் பிரதானம் என்று சொல்லுகிறோம்? தலையில் என்னென்ன உறுப்புகள் இருக்கின்றன? தலையில் இரு கண்கள் இருக்கின்றன, கண்கள் இல்லாவிட்டால் பார்க்க முடியாது; இரு காதுகள் இருக்கின்றன, காதுகள் இல்லாவிட்டால் கேட்க முடியாது; ஒரு மூக்கு இருக்கிறது, மூக்கு இல்லாவிட்டால் முகர முடியாது; ஒரு வாயும் இருக்கிறது, வாயில்லாமல் ருசிக்க முடியாது.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவ்வைந்தும் பஞ்சேந்திரியம் அல்லது ஐம்பொறிகள் என்று அழைக்கப்படும்; இந்த ஐந்தும் உங்கள் தலையில் இருக்கின்றன. இவைகளின் தொழில்களாகிய பரிசம், சுவை, பார்வை, மோப்பம், கேள்வி ஆகிய ஐந்தும் ஐம்புலன்கள் என்று சொல்லப்படும். உங்கள் தலைக்குள் என்ன இருக்கிறது? அதின் தொழில் என்ன? தலைக்குள் மூளை இருக்கிறது; மூளையே புத்திக்கு ஆதாரம்.

நமது சரீரத்திலுள்ள தலையையும் கை கால்களையும் தறித்துவிட்டால் மீதியாய் இருப்பதற்கு என்ன பெயர் ? தலையும் கைகால்களும் இல்லா உடம்புக்கு முண்டம் என்று பெயர் ?

முண்டத்தில் என்னென்ன இருக்கின்றன ? முண்டத்தில் முதுகு, நெஞ்சு, வயிறு என்ற மூன்று இருக்கின்றன.

மேலாகப் பார்த்தால் இந்த மூன்றுதான் உங்களுக்குத் தெரியும்; உள்ளே ஜீவனுக்கு ஆதாரமாகிய இரத்தாசயமும், நுரையீரல்களும், ஜீரணக் கருவிகளாகிய இரைப்பை, ஈரல், குடல் முதலியவைகளும் இருக்கின்றன.

கைகால்களில் என்னென்ன இருக்கின்றன? புயமும், முன்னங்கையும், உள்ளங்கை, புறங்கை, விரல்கள் முதலியவைகளும் கையில் இருக்கின்றன; தொடையும், முன்னங்காலும், பாதம், விரல்கள் முதலியவைகளும் காலில் இருக்கின்றன.

நமது சரீரம் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை அமைக்கப்பட்டிருக்கிற ஒழுங்கையும் அழகையும் பாருங்கள்; வலது பக்கத்திலிருப்பது போலவே இடது பக்கத்திலும் இருக்கும். இவைகளிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வதென்ன ? நாங்களும் எதைச் செய்தாலும் ஒழுங்கையும் அழகையுங் கையாட வேண்டும் என்று கற்றுக்கொள்கிறோம்.

கையெழுத்து அப்பியாசம்.

=பரிசம்=சுவை=பார்வை=மோப்பம்=
=கேள்வி=ஆகிய=ஐந்தும்=ஐம்புலன்கள்=
=ஒரே=ஓர்=வாய்=இருக்கையில்=
=இரண்டு=காதுகள்=இருப்பதேன்=

குறிப்பு:—'ஒ, ஓ, ஐ' என்ற எழுத்துகளும், 'ஆ, இ, டு, து, ரு' என்ற எழுத்துகளும் கீழ்க் கோட்டுக்குக் கீழே போவதை மாணாக்கர் கவனித்து எழுதவேண்டும். உபாத்தியாயர் ஒவ்வொரு பாடத்திலும் சில வரிகளைச் சொல்வதெழுதலாகப் பாவித்து, இரண்டு மூன்று வார்த்தைகளாய் உச்சரிக்க, மாணாக்கர் எழுத்துப் பிழையின்றி எழுதுவதுமல்லாமல், எழுத்துகளைச் சட்டப்படி சரியான ரூபமுடையவைகளாகவும் அழகாயும் எழுதவேண்டும்.

## பாடம் 7. சுத்தம் சுகத்துக்கு ஆதாரம். எ.

தலையில் பேன் இருப்பதற்கும், நகங்கள் கறுப்பாயிருப்பதற்கும் காரணம் என்ன? அழுக்கினால்தான் தலையில் பேன் உண்டாகிறது; நகங்களில் அழுக்கு அடைவதினால் அவைகள் கறுப்பாய்க் காணப்படுகின்றன.

சிரங்கு உண்டாவதற்கு முக்கிய காரணமென்ன? சரீரத்திலுள்ள அழுக்குதான் சிரங்குக்கு முக்கிய காரணமென சுகாதாரம் படிக்கிற என் அக்காள் சொல்லுகிறார்கள். மேலும் அழுக்கு வியாதிக்குத் தாயாம்.

ஆம், அசுத்தத்தினால்தான் அநேக வியாதிகள் உண்டாகின்றன; ஆதலால் வியாதியைப் பிறப்பிக்கும் அழுக்கை வியாதியின் தாய் என்று சொல்வது சரி.

வஸ்திரங்களில் சீலைப்பேன் உண்டாவதற்குக் காரண மென்ன? சீலைப்பேன் உண்டாவதற்கும் அழுக்கே காரண மாம்; சுத்த வஸ்திரம் தரித்திருக்கிறவர்கள் சீலைப்பேனால் வாதிக்கப்படுகிறதில்லை.

வீடுகளில் மூட்டுப் பூச்சியும் தெள்ளுப் பூச்சியும் இருப்பதற்குக் காரணமென்ன? வீட்டை வெள்ளை அடிக் காமல் அழுக்கடைய விடுவதினால்தான் இந்த அசுத்த கிருமிகள் உண்டாகின்றன.

வீடுமாத்திரம் சுத்தமாயிருந்தால் போதாது; ஊரின் தெருக்களும் சுற்றுப் புறங்களும் சுத்தமாய் இருக்கவேண் டும். மற்றப்படி பலவகைக் கொள்ளை நோய்கள் வந்து அநேகரை வாரிக்கொண்டு போய்விடும்.

தலையில் பேனும், தேகத்தில் சிரங்கும், நகங்களில் கறுப்பும் உண்டாகாதபடி செய்யவேண்டியதென்ன? தினந் தோறும் சுத்த ஜலத்தில் குளித்து, தினம் இரு முறை தலை வாரி, வாரத்தில் குறைந்தது ஒரு முறை எண்ணெய் ஸ்நா னஞ்செய்து வந்தால் பேனும், சிரங்கும் நம்மை அணுகா; காலைதோறும் நாம் நம் பற்களை விளக்கி, முகங் கை கால் களைக் கழுவுகையில் கைகால் நகங்களையுஞ் சுத்தஞ்செய்து, வேளா வேளைகளில் நகங்களை கத்தியினால் வெட்டினால் நகங்களில் அழுக்கு இராது; அவைகள் அழகாயுமிருக்கும்.

சீலைப்பேன் வஸ்திரங்களில் உண்டாகாதபடி செய்ய வேண்டியதென்ன? வஸ்திரம் அடிக்கடி வண்ணானுக்குப் போய்வருமானால் சுத்தமா யிருக்கும்; நாம் வண்ணானுக்கு அழுக்குப்போடாதபடி ஏழைகளானால், “கந்தையானாலும்

கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி'' என்ற பழமொழிப்படி நமது அழுக்கு வஸ்திரங்களை வெந்நீரில் போட்டு ஊறவைத்து, அழுக்குப்போகக் கசக்கி, வெயிலில் காயவைக்க வேண்டும்.

வீடுகளில் மூட்டுப்பூச்சியும் தெள்ளுப் பூச்சியும் வராதிருக்க என்ன செய்ய வேண்டும்? காலை மாலை தினம் இரு முறை வீட்டைப் பெருக்கி, வாரத்துக்கு ஒரு முறை ஒட்டறை அடித்துச் சுவர்களையும் பெருக்கி, தரையை மெழுகி, குறைந்தது வருஷத்துக்கு ஒரு முறை வீட்டுச் சுவர்களை உள்ளும் புறமும் வெள்ளை யடித்தால் இந்த அசுத்தப் பூச்சிகள் வீட்டில் இரா.

### சொல்வதெழுதலும் கையெழுத்தும்.

=தேக சுத்தமும் வஸ்திர சுத்தமும் வீட்= =டுச் சுத்தமும் சுகத்துக்கு ஆதாரம்; அசுத்= =தத்தைத் குறிக்கும் பூச்சிகளின் பேர் முத= =லாய்ப் பேசப்படல் ஆகாது; இருதயசுத்= =தம் இந்த மூன்று சுத்தங்களை விடச் சிறந்= =தது; கையிலே களவும், வாயிலே பொய்= =யும், மனதிலே அசுத்த நினைவுகளும் இருக்= =கப்படா.



## பாடம் 8. வண்ணாத்திப் பூச்சி. அ.

படத்தில் காணப்படுகிற செடியைப் பாருங்கள்; அதில் தொங்கும் பூச்சிப்படம் எதைக்குறிக்கிறது ? அது கம்பளிப் பூச்சியைக் குறிக்கிறது.

என் அதற்குக் கம்பளிப் பூச்சி என்கிற பெயர் வந்தது? அதின் தேகமெல்லாம் உரோமம் அடர்ந்திருப்பதால் அதற்கு அந்தப் பெயர் வந்திருக்கிறது.

படத்திலே சிறகுகளை விரித்திருக்கிறது எதைக் குறிக்கிறது? அது வண்ணாத்திப் பூச்சியைக் குறிக்கிறது.

கம்பளிப்பூச்சிக்கும் வண்ணாத்திப்பூச்சிக்கும் சம்பந்த முண்டோ? யாதொரு சம்பந்தமுமில்லை; கம்பளிப் பூச்சி; அவலக்ஷணமானது, அது நகர்ந்து செல்லும்; வண்ணாத்திப் பூச்சியோ அழகு பொருந்தியது, இது பறக்கும்.

கம்பளிப் பூச்சியிலிருந்து வந்தது வண்ணாத்திப் பூச்சி; வண்ணாத்திப் பூச்சியிலிருந்து வந்தது கம்பளிப் பூச்சி. அதெப்படி ஐயா? நீங்கள் சொல்லுகிறது எங்களுக்கு விளங்கவில்லை.

பட்சிகளைப் போலவே வண்ணாத்திப் பூச்சியும் முட்டைகள் இடுகின்றன. அந்த முட்டைகளிலிருந்து உண்டானவைகள்தான் கம்பளிப் பூச்சிகளும். தரையில் கிடக்கிறதாகக் காணப்படுகிறது எதைக் குறிக்கிறது? அது ஒரு காய்போல் தோன்றுகிறது; செடியிலிருந்து விழுந்திருக்க வேண்டும்.

நீங்கள் நினைக்கிறபடி அது காயல்ல, கூட்டுப்புழு; கம்பளிப் பூச்சியே கூட்டுப் புழு ஆகிறது; கூட்டுப் புழுவிலிருந்தே வண்ணாத்திப் பூச்சி வருகிறது; கம்பளிப் பூச்சி எதைச் சாப்பிடுகிறது? கம்பளிப் பூச்சி செடிகளிலுள்ள இலைகளைச் சாப்பிட்டு விரைவாய் வளர்கிறது.

கம்பளிப் பூச்சியைக் கூர்ந்து பார்ப்பீர்களானால் அதின் தேகத்தில் பதின் மூன்று வளையங்களும், முன் பாகத்தில் மூன்று சோடு கால்களும், பின் பாகத்தில் ஐந்து சோடு அல்லது இரண்டு சோடு கால்களும் உண்டு என்று அறிவீர்கள். ஒரு கூட்டம் கம்பளிப் பூச்சிகள் ஒரே

இரவில் மரஞ்செடிகளிலுள்ள இலைகளையும் பட்டைகளையுஞ் சாப்பிட்டு அவைகளை மொட்டையாக்கிவிடும். தங்கள் சரீரத்தின் அளவு சாப்பிட்டு விரைவாய் வளரும்; அவைகளின் வளர்ச்சிக்கு அவைகளின் தோல்கள் இடங்கொடுக்க ஐந்து முறை சட்டை கழற்றும்.

கம்பளிப் பூச்சி வாயிலிருந்து பட்டு ஆகிய பசை வரும்; அதைக் கிளையிலோ சுவரிலோ மறைவான இடத்தில் ஒட்ட வைத்து, தன்னையே அந்தப் பசையினால் சுற்றி, கூட்டுப் புழு ஆகி, உயிரில்லா வஸ்துபோல் தொங்கிக்கொண்டிருக்கும்; முட்டைக்குள் குஞ்சு உற்பத்தி ஆவதுபோல் கூட்டுப்புழுக்குள் வண்ணாத்திப் பூச்சி உண்டாகி, ஏற்ற காலத்தில் கூட்டுப்புழு வெடிக்க, அழகிய வண்ணாத்திப் பூச்சி அதிலிருந்து புறப்படும். கம்பளிப்பூச்சி வண்ணாத்திப் பூச்சியாக மாறும் சரித்திரம் அற்புதமாய்த் தோன்றுகிறது ஐயா; கூட்டுப் புழுக்களில் சில அழகான நகைகள் போல தொங்குகிறதையும் பார்த்திருக்கிறோம்.

=அவலக்ஷண கம்பளிப் பூச்சி அழகிய=
=வண்ணாத்திப் பூச்சி ஆனாற்போல், பஞ்சமா=
=பாதகங்களைச் செய்கிற மனுஷரும், மனு=
=ஷரைப் பிடித்துச் சாப்பிடுகிறவர்களும்=
=மாறி, பிறருக்காகத் தங்கள் ஜீவனைத் தத்=
=தஞ் செய்கிறார்கள்; இது அற்புதமல்லவா?=
=பொய் பேசி, சண்டையிட்டு, தாய்க்கு உதவி=

==செய்யாத பிள்ளேகளும் மாறி, மெய் பேசி,==
==பிறரோடு சமாதானமா யிருந்து, தாய்க்கு==
==உதவி செய்யலாம்.==

குறிப்பு:—கடைசியில் இருக்கும் வாக்கியங்களே சொல்வ தெழுதல் ஆக உபயோகிக்கலாம்; மாணுக்கர் எழுத்துப் பிழை விடும் வார்த்தைகளேச் சரியாய் உச்சரிக்கச் செய்து, அவைகளே எழுத்துக் கூட்டவுஞ் செய்யவேண்டும். எழுத்துக்கூட்டுகை யில் குற்றெழுத்துக்களேயும், நெட்டெழுத்துக்களேயும் சரியாய் உச்சரிக்கிருர்களா என்று கவனிக்கவேண்டும். கையெழுத்தும் இதில் பார்க்கவேண்டும்.

## பாடம் 9. மிருகக் காட்சி சாலே. கூ.



சிங்கத்தைப் பார்த்திருக்கிறீர்களா? ஆம் சிங்கத்தைப் பார்த்திருக்கிறேன்; இதோ இந்தப் புஸ்தகத்தில்கூட சிங் கம் இருக்கிறது ஐயா.

சிங்கம் இங்கே இருக்கிறதா? அவன் தெரியாமல் சொல்லுகிறுன் ஐயா; எங்கள் கையிலிருக்கிற புஸ்தகத்தில் சிங்கத்தின் படம் இருக்கிறது. சிங்கம் இங்கே இருந்தால் எங்களைக் கொன்று தின்றுவிடுமே.

உயிருள்ள சிங்கத்தை யாராவது பார்த்திருக்கிறீர்களா? நான் பார்த்திருக்கிறேன் ஐயா; சென்னையிலுள்ள சிங்கார வனத்தில் இருக்கும் மிருகக் காட்சி சாலையில் இருப்புக் கூட்டுக்குள்ளே அடைத்து வைத்திருக்கிறுர்கள்; ஆண் சிங்கமும், பெண் சிங்கமும், சிங்கக் குட்டிகளும் அங்கே இருக்கின்றன.

வேறு என்ன மிருகங்கள் அங்கே இருக்கின்றன? புலி, ஓநாய், கரடி, யானை முதலிய துஷ்ட மிருகங்களையெல்லாம் மிருகக் காட்சி சாலையில் காணலாம்.

சாதுவான மிருகங்கள் அங்கே இல்லையோ? மான், மரை, ஆடு, வரிக்குதிரை முதலிய சாதுவான மிருகங்களும் அங்குண்டு.

குரங்குகள் அங்கு இல்லையோ? வாராவதி மேலேறி தீவுக்குப் போனுல் அநேக வகைக் குரங்குகளைப் பார்க்கலாம். நாங்கள் கடலை கொண்டுபோய் அவைகளுக்குப் போட்டு, அவைகள் செய்யும் சேஷ்டைகளைக் கண்டு களிப்போம். அங்கே கட்டப்பட்டிருக்கும் தொட்டியாகிய சிறு குளத்தில் முதலைகள் இருக்கின்றன.

தீவு என்றுல் என்ன? முற்றிலும் ஜலத்தால் சூழப்பட்ட நிலபாகம் தீவு என்று நாங்கள் படிக்கும் பூகோள சாஸ்திரம் என்ற புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

அத்தீவில் வேறென்ன பார்த்தீர்கள்?
வாத்து, மயில், கிளி, வக்கா, நாரை, கூழைக்
கடா, காட்டுக்கோழி, கின்னிக்கோழி, அன்
னப்பட்சி முதலிய பலவகைப் பட்சிகளும்
அங்கே இருக்கின்றன. தீவுக்கு வெளியே
நெருப்புக்கோழிகள் இருக்கின்றன.

படத்திலுள்ள சிங்கம் மிருகக் காட்சி சாலையில் இருப்புக் கூட்டுக்குள் அடைக்கப்பட்டிருக்கிற சிங்கத்தின் படமோ? அல்ல ஐயா, இது மலைமேல் நிற்கிறாப்போல் இருக்கிறது; இந்தப் படத்தைப் பார்க்கிறபோதே தேகஞ் சிலிர்க்கிறது; நேரே முகத்துக்கு முகமாய் அதைப் பார்த்துத் தப்ப முடியாது ஐயா.

சிங்கம் கொடிய மிருகந்தான்; ஆனால் அது புலியைப் போல் குரூரமானதல்ல; அது வீரம் உடைய மிருகம்; மகா பெரிய யானையையும் ஒரே அடியில் கொன்றுபோடும். இது எல்லா மிருகங்களுக்கும் மேலான தீரம் உடையதாகையால் சிங்கமே மிருக ராஜன் என்று அழைக்கப்படுகிறது. மனுஷன் சிங்கத்தையும் அடக்கிஆள்வதால் மனுஷனே மிருகங்களுக்கெல்லாம் இராஜா.

குறிப்பு:—இந்தப் பாடத்தில் சில வரிகளைச் சொல்வதெழுதலாகவும், கையெழுத்தப்பியாசமாகவும் உபயோகிக்கலாம். பிழையற எழுதக்கூடிய பையனே பாஷையில் கெட்டிக்காரனாவான். எழுத்து சரியான ரூபப்படி அழகாயிருந்தால் பிறர் அதை ஆவலோடு சுலபமாய் வாசிப்பார்கள்.



பாடம் 10. மயில். ம.

மிருகக் காட்சி சாலையில் பட்சிகளையும் பார்த்தீர்களே; மயில் எப்படிப்பட்டது? பட்சிகளிலெல்லாம் அழகில் சிறந்தது மயில். பெண் மயில் அவ்வளவு அழகுள்ள தல்ல, அது ஆடுகிறது மில்லை. ஆண் மயில் பெரிய பட்சி, அதின் தோகை அதிக நீளமாயிருக்கும்; அதின்மேல் வரிசை வரிசையாய் இருக்கும் கண்கள் போன்ற புள்ளிகள் நமது கண்களைக் கவரும். மயில் ஆடும்போது கண்கொண்டு பார்க்க முடியாது, அவ்வளவு அழகாயிருக்கும்.

மயில் என்ன நிறம்? பளபளப்பான நீல நிறமும், பசுமையான பச்சை நிறமும், பொன்போன்ற மஞ்சள் நிறமும் அதின் தோகையில் காணப்படுகின்றன; அந்த மூன்று நிறங்களும் நன்ருய்ப் பொருந்தியிருக்கின்றன. அதின் தலை

யில் இருக்கும் பசுமையான கொண்டையும் அதற்கு அழகைத் தருகிறது. வெண்ணிற மயிலும் மிருகக் காட்சி சாலையில் இருக்கிறது.

மயிலின் சத்தம் எப்படிப்பட்டது? அதின் சிறகுகள் நமது கண்களுக் கேற்ற காட்சியாய் இருக்கிறதுபோல் அதின் சத்தம் நமது காதுகளுக்கு ஏற்றவை அல்ல. அது ஆடுவதைப் பார்க்க ஆசைப்படுகிறோம்; ஆனால் அதின் சத்தத்தைக் கேட்க நாங்கள் விரும்புகிறதில்லை.

நானும் அப்படியே நீங்கள் தலைவாரி, சுத்த வஸ்திரம் தரித்து வருகையில் உங்களைப் பார்த்துக் களிக்கிறேன்; நீங்கள் ஒருவரோடு ஒருவர் வாதிட்டு, சண்டைபோடும் சத்தத்தைக் கேட்க இஷ்டப்படுகிறதில்லை.

மயில் நமது இந்தியா தேசத்துக்கே உரிய பட்சி; அது அழகாயிருப்பதால் அதை உலகம் எங்குங் கொண்டு போய் வளர்க்கிறார்கள். நீங்கள் நல்ல குணமுடையவர்களாய் இருந்தால் எல்லாராலும் நேசிக்கப்படுவீர்கள்.

இந்தியா தேசம் இனிப்பான பழங்களுக்குப் பெயர் போனதாய் இருப்பது போலவே அழகான பட்சிகளுக்கும் பெயர் போனதாய் இருக்கிறது. ஆனால் நியுகினி தீவிலிருக்கும் பரதீசு பட்சி மயிலைப் பார்க்கிலும் அழகில் சிறந்தது; பின்வரும் படத்தைப் பாருங்கள்.

மயிலைப் பார்க்கிலும் இது அழகாய்த் தெரியவில்லை ஐயா; பருமனிலும் இது மயிலுக்கு ஈடாகாது.

ஆம், இந்தப் படத்தில் பரதீசு பட்சி சரியாய்க் காட்டப்படவில்லை. நீங்கள் இந்தப் பட்சியைப் போய்ப் பார்ப்



பீர்களானல், மெய்யாய் இது பரம லோகத்திலிருந்து இறங்கி வந்தது என்று எண்ணுவீர்கள். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், பச்சோந்தியைப்போல் அது தன் நிறங்களை மாற்றிக்கொண்டிருக்கும். அதின் சரீரம் புரு வின் சரீரம்போல் சிறியதாய் இருக்கும்; ஆனல் அதில் முளைத்திருக்கும் மெல்லிய பகட்டும் இறகுகள் அதிக நீள மானவைகள்; அதனல் அது பெரிய பட்சிபோல் காணப் படும். பரதீசு பட்சிகள் கூட்டமாய் உன்னதத்தில் பறந்து போகும் காட்சியை நீங்கள் பார்த்தால் மயங்கிப்போவீர் கள்.

சொல்வதெழுதலும் கையெழுத்தும்.

=துரைசானிமார் இதன் சிறகைத் தங்= =கள் தொப்பியில் வைத்துக்கொள்வார்கள்.= =துரைமார் வேட்டையாடி இப் பட்சியைத்= =தங்கள் வீடுகளில் வைக்கும்போது இதினு= =டைய கால்களைத் தறித்து எறிந்து போடு= =வதேன்? இதிலிருந்து உங்களுக்குப் பிர=

=யோஜனமாய் நீங்கள் கற்றுக்கொள்ளும்=
=நீதி யென்ன?=

### செய்யுள்.

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

குறிப்பு:—மேலே இருக்கும் செய்யுளை வாசகத்தைப் போல் எழுதாமல், ஒவ்வொரு வரியின் முதல் எழுத்தும் ஒன்றிற் கொன்று நேரே கீழ் இருக்கத்தக்கதாக புஸ்தகத்தில் இருப்பதுபோல் எழுதவேண்டும். ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு வரியில் அடங்காதே போனால் மீதியாயிருக்கும் வார்த்தைகளை அந்தந்த வரிக்குக் கீழே உள்ளடக்கி எழுதவேண்டும். உபாத்தியாயர் கடின பதங்களுக்கு அருத்தமும், பாட்டுக்கு இராகமுங் கற்றுக்கொடுக்கவேண்டும்.

## பாடம் 11. மச்சக் காட்சி சாலை. ௰௧.



மச்சக் காட்சி சாலைக்குப் போயிருக்கிறீர்களா? ஆம், மச்சக் காட்சி சாலைக்குப் போயிருக்கிறோம்; அங்கே சிறு

கண்ணுடிக் குளங்களில் மீன்களை விட்டு வளர்க்கிறுர்கள். அந்த மீன்கள் அழகாயும் விநோதமாயும் இருக்கிறது போல கடைகளில் விற்கும் மீன்கள் இல்லையே.

அதிகப் பளபளப்பான மச்சங்கள் விஷத்தன்மை உள்ளவைகள்; அவைகளை மனுஷர் சாப்பிடமாட்டார்கள்; ஆகையால் அவைகளைக் கடைகளுக்குக் கொண்டுவருகிற தில்லை. மின்சார மீனைப் பார்த்திருக்கிறீர்களா? ஆம் ஐயா, அதைத் தொட்டால் கை அதிரும். அங்கே பாம்பு களும் இருக்கின்றன.

நீங்கள் பார்த்தவைகள் பாம்புகளல்ல; அவைகள் பின்னற் பாம்புகள் என்ற பெயரையுடைய ஓர் வகை மீன் கள். கடற் பாம்புகளும் ஒரு தொட்டியில் உண்டு; அவை கள் நாகப்பாம்பைவிட விஷமுடையவைகள்.

நிறத்தை மாற்றும் சக்தி அநேகவகை மீன்களுக்கு உண்டு; உற்சாகமாய் இருக்கும்போது சில மீன்களுக்குப் புள்ளிகள் தோன்றும்; வேறுசில அழகான நீல நிறமாகும். நிறம் மாறுகிறதற்குக் காரணம் என்னவென்றுல், தோலி லிருக்கும் சுருக்குகள் நிமிருவதே. தோலில் பல வகை நிறங்களுண்டு, அவைகளில் நீலநிறமுள்ள பாகங்கள் விரிந் தும், மற்ற நிறமுள்ள பாகங்கள் சுருங்கியும் இருந்தால் மீன் நீலநிறமாகத் தோன்றும். குதிரைமீன், பசுமீன், எலிமீன், காடைமீன் என்ற பலஜாதி மீன்களையும் அங்கே பார்க்கலாம்.

மச்சக் காட்சி சாலையில் நீங்கள் கண்ட சுத்த ஜல மீன்களில் சிலவற்றின் பெயர்களைச் சொல்லுங்கள்.

கெண்டை, கெளுத்தி, வரால், தேளி முதலிய மீன்களையும் அங்கே பார்த்தோம். தேளி மீன் தன் முட்களால் நம்மைக் காயப்படுத்தினால் நமக்கு நோவு உண்டாகும்.

குறிப்பு:—பாடத்தின் ஏதாவதோர் பாகத்தை சொல்வதெழுதலாகவும், கையெழுத்து அப்பியாசமாகவும் உபயோகிக்கலாம். எழுத்துப் பிழையின்றி எழுதுவதும், எழுத்துகளை அழகாய் எழுதுவதும் வாசக பாடத்திற்கு உரிய முக்கிய பாகங்களாம்.

## பாடம் 12. பல பொருட் காட்சி சாலை. ௰௨.



படத்தில் என்னத்தைப் பார்க்கிறீர்கள்? இப்படிப்பட்ட காட்சியை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?

ஒரு புட்டிக்குள் செத்த பாம்பைப் போட்டு வைத்திருக்கிறதுபோல் தோன்றுகிறது. இப்படிப்பட்ட காட்சியை பலபொருட்காட்சி சாலையில் பார்க்கலாம்; அங்கே புட்டிகளுக்குள் விதம் விதமான பாம்புகளையும், பல்லிகளையும், ஓந்திகளையும், தவளைகளையும், ஊர்வனங்களையும் போட்டு, அவைகள் நாறிப்போகாதபடி புட்டிகளுக்குள் ஓர்வகைச் சாராயத்தையும் ஊற்றி வைத்திருக்கிறார்கள். ஒரு புட்டிக்குள் மிகச் சிறிய யானைக்குட்டியும் இருக்கிறது.

அங்கே வேறென்ன உண்டு? பஞ்சு, நார் முதலியவைகளால் துறுக்கப்பட்ட நானா தேசத்துப் பட்சிகள், மீன்கள், மிருகங்கள் முதலியவைகள் அநேகம் இருக்கின்றன. திமிங்கிலம், மான், குதிரை முதலியவைகளின் எலும்புச் சட்டங்களும் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

ஜீவஜெந்துக்கள் மாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றனவோ? அல்ல ஐயா, நானாதேசத்து காசுகள், தானியங்கள், கற்கள், பலகைகள், கைத்தொழில் சாமான்கள், யுத்தாயுதங்கள் முதலிய பலவகைப் பொருட்களும் அங்கே வைக்கப்பட் டிருக்கின்றன. விலையுயர்ந்த கற்களுங்கூட அங்கு காட்சிப் பொருட்களாய் இருக்கின்றன.

பலபொருட் காட்சி சாலைக்குப் போவதினால் உண்டாகும் நன்மை என்ன ? உங்கள் பாடசாலையில் பலபொருட் காட்சி சாலை என்ற ஒன்று உண்டா ? உங்கள்வீடுகளிலும் பல பொருட்காட்சிசாலை வைக்க நீங்கள் என்னென்ன பிரயத்தனஞ் செய்திருக்கிறீர்கள் ?



## பாடம். 13. தொட்டாற் சுருங்கி. ம௩.

மேலே இருக்கும் படங்களைக் கொண்டு நீங்கள் அறிந்து கொள்வ தென்ன? மூன்று பூந்தொட்டிகளில் செடிகள் இருக்கின்றன என்று அறிந்து கொள்கிறோம்.

அந்தச் செடிகளெல்லாம் என்னென்ன ஜாதிகள்? மூன்றும் ஒரே ஜாதி செடிகளாய் இருக்கவேண்டும். ஆனால் நடுத் தொட்டியிலிருக்கிற செடியின் இலைகளும் காம்பு களும் சுருங்கியும், மூன்றாம் தோட்டியிலிருக்கிற செடியின் இலைகள் மாத்திரம் சுருங்கியும், முதலாம் தொட்டியி லிருக்கிற செடியின் இலைகள் விரிந்தும் இருக்கின்றன.

நடுவிலிருக்கிற செடியின் இலைகளும் காம்புகளும் சுருங்கிப் போனதற்குக் காரண மென்ன? யாராவது தொட்டதினால் சுருங்கிப்போயிற்றோ ஐயா? அப்படியானால் அதைத் தோட்டாற் சுருங்கி என்று சொல்லவேண்டும்.

ஆம், மூன்றும் தோட்டாற் சுருங்கி என்னும் செடியைக் குறிக்கிற படங்கள் தான். மூன்ரும் செடியின் இலைகள் சுருங்கினுற்போல் இருக்கிறதற்குக் காரண மென்ன? அதையும் யாரோ தொட்டிருக்கலாம்.

அந்தப் படம் யாருந் தொட்டதைக் குறிக்கவில்லை; செடி தூங்குகிறதைக் குறிக்கிறது. செடி எப்படி ஐயா தூங்கும்? நீங்கள் சொல்லுகிறது எங்களுக்கு விளங்கவில்லை.

நீங்கள் எல்லோரும் ஆளுக்கு ஒரு தொட்டி வாங்கி, ஆளுக்கொரு தொட்டாற் சுருங்கி வைத்து வளர்த்துப் பாருங்கள்; நாள் தவருமல் சூரியன் அஸ்தமிக்கையில் மூன்ருந் தொட்டியிலிருப்பதுபோல் இலைகள் தங்களை மூடிக்கொள்வதையும், சூரியன் உதயமாகையில் இலைகள் விரிவதையும் காண்பீர்கள். வாகை முதலிய மரங்கள் இரவில் நித்திரை செய்வதை நீங்கள் கண்டதில்லையோ?

தொட்டாற் சுருங்கி இலைகளுக்கு நாம் கற்றுக்கொடுக்கலாம். அந்த இலைகள் மகா உணர்ச்சி உள்ளவைகள். ஆதலால், ஒரு காம்பிலிருக்கும் இலைகளில் ஒன்றைத் தொட அதற்கு எதிரே இருக்கிற இலையும் சுருங்கவும், மற்ருெரு காம்பிலிருக்கும் ஒரு இலையைத் தொட்ட மாத்திரம் அதின் பக்கத்தில் இருக்கும் இலைகள் சுருங்குகையில் அதின் எதிர் பக்கத்திலிருக்கும் இலைகள் இருந்தபடி விரிந்தே இருக்கவும், வேருெரு காம்பிலிருக்கும் ஒரு இலையைத்

தொட இரு பக்கங்களிலும் இருக்கும் இலைகள் ஒன்றை விட்டு ஒன்று சுருங்கவும், தினம் பல முறை, பல நாட்களாய்ப் பழக்குவித்தால், அவைகள் நமக்குக் கீழ்ப்படிந்து நாம் பழக்குவித்தபடியே செய்யும்.

தொட்டாற் சுருங்கி எனும் செடியிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எவை?

பாடம் 14.  ௧௪.

## குதிரைகளின் காதுகள்.

படத்திலே நீங்கள் பார்ப்பதென்ன? மூன்று குதிரைகளின் தலைகளைப் பார்க்கிறோம்.

காதுகளைக் கவனித்து வித்தியாசத்தைச் சொல்லுங்கள். முதல் குதிரையின் காதுகள் பின்னோக்கி இருக்கின்றன; மூன்றாங் குதிரையின் காதுகள் பக்கங்களை நோக்கி இருக்கின்றன; நடுக் குதிரையின் காதோ முன்னோக்கி இருக்கின்றன.

உன் காது எதை நோக்கியிருக்கிறது? என் காதுகள் பக்கங்களை நோக்கி இருக்கின்றன.

குதிரைகள் தங்கள் காதுகளை என் முன்னும் பின்னும் திருப்புகின்றன? குதிரைகள் முன்னாலிருந்து வரும்

சத்தத்தைக் கேட்கக் காதுகளை முன்னால் திருப்புகின்றன; பின்னாலிருந்து வரும் சத்தத்தைக் கேட்கப் பின்னால் திருப்புகின்றன.

நீ உன் காதை அப்படி ஏன் திருப்புகிறதில்லை? என் காது திரும்பத்தக்கதாய் உண்டாக்கப் படவில்லை; நான் என் காதைத் திருப்ப என் தலையைத் திருப்பவேண்டும்.

முயலைப் பிடிக்க நாய் ஓடுகையில் அவைகளின் காதுகள் எப்பக்கம் திரும்பியிருக்கும்? நாய் ஓடிவரும் சத்தத்தைக்கேட்க முயலின் காதுகள் பின்னோக்கி யிருக்கும்; ஓடிப்போகும் முயலின் சத்தத்தைக் கேட்க நாயின் காதுகள் முன்னோக்கி இருக்கும்.

ஒரு பிராணியின் காதைப் பார்த்து அது முட்டையிடுமோ, அல்லது குட்டி போடுமோ என்று சொல்லலாம். எலியின் காதுக்கும் கோழியின் காதுக்குமுள்ள பேதமென்ன? எலியின்காது நமது காதுபோல் மடல் காது, கோழியின் காதில் துவாரம் மாத்திரம் இருக்கிறது; மடல் காதுள்ள பிராணிகள் எல்லாம் குட்டி போடுமோ?

ஆம், குட்டிபோடுகிற குதிரை, நாய், அணில், வௌவால் முதலியவைகளின் காதுகளைக் கவனித்துப் பாருங்கள். மடல் காதுள்ள மனுஷரும் பிள்ளை பெறுகிறார்கள், முட்டை யிடுகிறதில்லை. நீங்கள் சொல்லுகிறது சரியென்று அறிகிறோம் ஐயா; மடல்காது இல்லா பட்சிகளும்,

=பல்லி, பாம்பு முதலியவைகளும் முட்டை=
=யிடுகின்றன, குட்டிபோடுகிறதில்லை.=

குறிப்பு:—பேசுகிறதுபோல் வாசிப்பதே நல்ல வாசிப்பு; முதல் பாடத்திலிருந்தே மாணுக்கர் பேசுகிறுப்போல் வாசிக்கப் பழக்குவிக்கப்படவேண்டும்.

## பாடம் 15. பிள்ளைகளுக்கு உரிய ஐந்து ௵. இலக்ஷணங்கள்.

கீழ்ப்படிதல், உண்மை, பட்சம், ஜாக்கிரதை, புனிதம் ஆகிய ஐந்து குணங்களும் பிள்ளைகளுக்கு இருக்கவேண்டிய முக்கிய இலக்ஷணங்களாம். இலக்ஷணம் என்ருல் அழகு என்று அருத்தம். இந்தக் குணங்கள் இல்லாத பிள்ளைகள் அழகுள்ள பிள்ளைகள் அல்ல.

கீழ்ப்படிதல் என்ருல் அருத்தம் என்ன? சொன்னபடி செய்தல் கீழ்ப்படிதல் ஆகும்; தாய் தகப்பன் சொல்லுகிற படி செய்கிற பிள்ளைகள் கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகள். உபாத்தியாயர் சொல்லுகிறபடி செய்கிற பிள்ளைகள் கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகள்.

உண்மை என்ருல் அருத்தம் என்ன? உள்ளதை உள்ளது என்றும், இல்லதை இல்லது என்றும் சொல்வது உண்மை பேசல். இல்லாததைச் சொல்வது பொய், உள்ளதைச் சொல்வது மெய். உண்மை பேசும் பிள்ளைக்கு மாய்மாலம் இராது:

பட்சம் என்றால் என்ன? பிரியங் காட்டுதல் பட்சம் ஆகும். தாயை நேசிக்கிற பிள்ளை பட்சம் உள்ள பிள்ளை; மற்ற பிள்ளைகளுக்குப் பிரியங் காட்டுகிற பிள்ளை பட்சம் உள்ள பிள்ளை; பட்சம் உள்ள பிள்ளை மிருகங்களையும் பட்சிகளையும் நேசிக்கும்.

ஜாக்கிரதை எதைக் குறிக்கும்? ஜாக்கிரதை என்றால் கவனம், சுறு சுறுப்பு என்ற அருத்தங்கள் கொள்ளும். தன்னுடைய புஸ்தகம், உடுப்பு முதலியவைகளைக் கண்ட இடமெல்லாம் போடும் பிள்ளை ஜாக்கிரதை உள்ள பிள்ளை அல்ல; உபாத்தியாயர் சொல்லுகிறதைக் கவனிக்காத பிள்ளை ஜாக்கிரதை உள்ள பிள்ளை அல்ல; செய்யவேண்டியதைச் செய்யாமல் சோம்பலாய் இருக்கும் பிள்ளை ஜாக்கிரதை இல்லாத பிள்ளை.

புனிதம் என்றால் அருத்தம் என்ன? புனிதம் என்றால் சுத்தம், பரிசுத்தம் என்ற பொருள்படும். சரீர சுத்தத்தையும் வஸ்திர சுத்தத்தையும் இது குறிக்கும் என்றாலும், சுத்தமான எண்ணத்தையும், சுத்தமான பேச்சையும், சுத்தமான நடக்கையையுமே விசேஷமாய்க் குறிக்கும். கெட்ட வார்த்தை பேசுகிற பிள்ளை புனிதம் உள்ள பிள்ளை அல்ல; அசுத்த நினைவுள்ள பிள்ளை புனிதம் உள்ள பிள்ளை ஆகாது; அசுத்த செய்கைகளைச் செய்கிற பிள்ளை புனிதம் உள்ள பிள்ளை அல்ல.

குறிப்பு:—மாணுக்கரிடத்தில் நற்குணங்கள் தோன்ற உபாத்தியாயர் தம்மால் இயன்றதையெல்லாம் செய்யவேண்டும்; சன்மார்க்க பயிற்சிக்கு வாசகபாடம் ஏற்றது.



## பாடம் 16. பேராசை தரித்திரம். ௰௬.

படம் என்னத்தைக் குறிக்கிறது? ஒரு நாய் ஏதோ ஒன்றைக் கௌவிக்கொண்டு குறுக்கே போடப்பட்டிருக்கும் பலகைமேல் நிற்கிறது; அது வாயிலிருப்பது விழுகிறுப்போல் தோன்றுகிறது.

நீ சொன்னது சரியே; இறைச்சியைத் திருடிக் கொண்டு பாலத்தின் வழிபோகிற நாய் கீழேபோகும் நீரோடையின் ஜலத்தை எட்டிப் பார்த்தது. நாய் ஜலத்தில் ஒரு உருவத்தைக் கண்டது; அந்த உருவம் எதுவாயிருக்கலாம்? அது அந்த நாயின் நிழலாயிருக்கலாம்.

புத்தியில்லாத அந்த நாய் தன் சொந்த நிழலை வேறொரு நாயென்று எண்ணி, ஜலத்தில் காணப்பட்ட இறைச்சித் துண்டையும் கௌவினது; தன் வாயிலிருந்த இறைச்சித்துண்டுக்கு என்ன நேரிட்டிருக்கும்? இறைச்சித் துண்டு ஜலத்தில் விழுந்து காணாமற் போயிருக்கும்.

நாயின் செய்கையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? முதலாவது, அது இறைச்சியைத் திருடிக்கொண்டு போனது பெரிய தப்பு; இரண்டாவது, அது இன்னொரு

நாயின் வாயில் இறைச்சி இருக்கிறது என்று எண்ணி அதைக் கௌவப்பார்த்தது அதிலும் பெரிய தப்பு. அந்த நாய் இறைச்சியை இழந்ததற்காகச் சந்தோஷப்படுகிறோம் ஐயா.

நீங்கள் சந்தோஷப்படுகிறது போதாது; இந்தச் சம்பவத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் நீதி என்ன? பிறர் பொருளை நாங்கள் திருடலாகாது என்றும், பேராசை தரித்திரம் என்றும் கற்றுக்கொள்கிறோம்.

பேராசையுள்ள இந்த நாய்க்கதையை புஸ்தகத்தைப் பாராமல் உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதுங்கள்; வியாசம் எப்படி எழுதுகிறீர்கள் என்பதைக் கவனிப்ப தோடு எழுத்துப் பிழையும் கையெழுத்தும் இதில் கவனிக்கப்படும்.

## பாடம் 17. மதுபானம் விஷபானம். ம௳.

பானம் என்றால் எது? நாம் குடிக்கும் ஜலவஸ்து பானம் என்று அழைக்கப்படும்.

பானமாகவே நமக்குக் கிடைக்கும் பானங்கள் எவை? மனுஷர் செய்யும் பானங்கள் எவை? ஜலம், பால், இளநீர் முதலியவைகள் பானமாகவே நமக்குக் கிடைக்கின்றன; காப்பி, தேயிலை, கொக்கோ, எலுமிச்சம்பழ ரசபானம், சோடாநீர், நன்னாரி சர்பத்து முதலியவைகள் மனுஷர் செய்துகொள்ளும் பானங்கள்.

மனுஷர் செய்கிற பானங்களுக்கு என்ன பெயர் கொடுக்கலாம்? இயற்கையாய்க் கிடைக்கும் பானங்

களுக்கு என்ன பெயர் கொடுக்கலாம்? மனுஷர் செய்யும் பானங்களுக்கு செயற்கைப் பானங்கள் என்றும், இயற்கையாய்க் கிடைக்கும் பானங்களுக்கு இயற்கைப் பானங்கள் என்றும் பேர் கொடுக்கலாம்.

மதுபானங்கள் என்றால் எவை ஐயா? மஸ்து என்னும் விஷஞ் சேர்ந்திருக்கும் பானங்கள் மதுபானங்கள். மதுபானங்களை பிரையேறிய மதுபானங்கள், காய்ச்சிவடித்த மதுபானங்கள் என இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம். கள், திராக்ஷரசம், பீர் முதலிய பானங்கள் புளிப்பேறிய அல்லது பிரையேறிய மதுபானங்கள்; சாராயம், ஜின், உவிஸ்கி, ரம், பிராந்தி முதலியன காய்ச்சிவடித்த மதுபானங்கள்.

ஜலம் ஏன் குடிக்கிறோம்? பானத்தின் தன்மை என்ன? தாகத்தைத் தீர்க்க ஜலம் குடிக்கிறோம்; தாகத்தைத் தீர்ப்பதே பானத்தின் தன்மை.

மதுபானம் பானமா? மதுபானம் தாகத்தைத் தீர்க்காது; ஆகையால் அது பானம் ஆகாது.

மதுபானத்துக்கு நாம் என்ன பேர் கொடுக்கலாம்? மதுபானத்துக்கு விஷபானம் என்ற பேர் கொடுக்கலாம்; ஏனென்றால், அதில் மஸ்து என்னும் விஷம் இருக்கிறது.

சாராயங் குடித்தவன் எப்படி நடக்கிறான்? அவன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான், சண்டையும் போடுகிறான், கத்தியெடுத்துப் பிறரைக் குத்தியும் போடுகிறான்.

அவன் வீடு எப்படி இருக்கும்? அவன் வீடு ஒழுங்கின்றி அலங்கோலமாய் இருக்கும்; அவன் வீட்டார் வறுமையினால் புசிக்க நல்ல போஜனமும், உடுக்க நல்ல வஸ்திரமும் இன்றி கஷ்டப்படுவார்கள்.

மஸ்து சுவாசக் கருவிகளுக்கும், ஜீரணக் கருவிகளுக்கும், இரத்த வோட்டக் கருவிகளுக்கும், மூளைக்கும் செய்யும் கெடுதிகள் கொஞ்சமல்ல; அதனால் மதுபானங்கள் அருந்துகிறவன் பல நோய்களுக்கு ஆளாகி சீக்கிரம் மரித்துப் போவான். மஸ்து மனுஷனுடைய சரீரத்துக்குச் செய்யுந் தீங்குகளை விட அவனுடைய குணத்துக்குச் செய்யுந் தீங்கே மகா கொடியது; அது அவன் மதியைக் கெடுத்து, இழிவான தன்மையை எழுப்பிவிட்டு, பாவக் கிரியைகளைக் கூசாமல் செய்யப் பண்ணுகிறது.

இந்தப் பாடத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் நீதி என்ன?

## பாடம் 18. அது என் தகப்பனாரை ம அ· வருத்தப்படுத்தும்.

பிராங்க், சார்லி என்ற இரு சிறு பையன்களிருந்தார்கள். அவர்கள் விளையாட்டாய்ப் போய் சேரிப் பழங்கள் பழுத்திருந்த ஒரு பெரிய மரத்தைக் கண்டார்கள். பிராங்க் என்பவன் பழங்களைப் பார்த்து வாயூறி: இந்தப் பழங்கள் எவ்வளவு ருசியாயிருக்கும்! அவைகளைப் பறித்துத் தின்போம் வா; நம்மைப் பார்க்க யாருமில்லை என்றான்.

## 18. அது என் தகப்பனாரை வருத்தப்படுத்தும்

சார்லி அவனை நோக்கி: நாம் பழங்களைப் பறிக்கலாகாது; பழங்களைத் தொடலாகாதென என் தகப்பனார் சொன்னது உனக்குத் தெரியுமே என்றான்.

பிராங்க்: ஆனால் உன் தகப்பனார் நம்மைப் பார்க்க முடியாது; உன் தகப்பனார் அறிந்தாலும் அவர் அதிகப் பட்சமுள்ளவரானதால் உன்னை வருத்தப்படுத்த மாட்டார்; ஆதலால் சில பழங்கள் பறித்துக்கொள்ளலாம் வா என்றான்.

அதற்குச் சார்லி: என் தகப்பனார் என்னை வருத்தப் படுத்தமாட்டார் என்பது எனக்குத் தெரியும்; ஆனால் அவர் சொன்னபடி நான் செய்யாதே போனால் அது அவரை வருத்தப்படுத்தும்; பிராங்கே, அவருக்கு வருத்தங் கொடுக்க நான் விரும்பாதபடியால் போய்விடுவோம், வா என்றான்.

இருவரும் போய்விட்டார்கள்; ஒரு பழங்கூடப் பிடுங்கவில்லை.

சார்லியின் நடக்கையிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டதென்ன? புஸ்தகத்தைப் பாராமல் இந்தக் கதையை எழுத்துப்பிழை இன்றி அழகாய் எழுதுங்கள்.

குறிப்பு:—மாணாக்கர் சம்பாஷணை ரூபமாய் இந்தப் பாடத்தை வாசிக்க வேண்டும். இருவர் தங்களை சார்லி, பிராங்க் என்ற பையன்களாகப் பாவித்துச் சம்பாஷிக்கட்டும்.

## பாடம் 19. கிரேஸ் டார்லிங் என்ற சுத்தவீரி. ௰௬.

1838-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம் 6-ஆம் தேதி ஹல் என்ற இடத்திலிருந்து டண்டி என்ற இடத்துக்

குப்போன கப்பல் பெருங்காற்றில் அகப்பட்டு, பாறைகளில் மோதி, கப்பலின் முன்னணியத்தோடு 40 பேர் அமிழ்ந்திப் போனார்கள். வேறு ஒன்பது பேர் கப்பலின் பின்னணியத்தைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு அலசடிப்பட்டார்கள்.

ஒரு மைலுக்கப்பால் ஒரு தீவில் கட்டப்பட்டிருந்த லாங்ஸ்டன் தீபஸ்தம்பத்தில் டார்லிங் என்ற கடல் வீரன் குடியிருந்து விளக்கேற்றிவந்தான். இவன் மனைவியும் இவனுடைய ஒரே குமாரத்தியாகிய கிரேஸ் என்பவளும் அவனோடு குடியிருந்தார்கள். அலைகள் பாறைகளில் மோதி எழும்பி தீபஸ்தம்பத்தையும் தாக்கினபடியால் அம்மூவரும் அன்றிரவெல்லாந் தூங்கக்கூடவில்லை.

அதிகாலையில் கிரேஸ் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கையில் பிடித்தவளாய் தீபஸ்தம்பத்தின்மேல் ஏறிப் பார்த்தாள். ஒன்பது பேர் படும் கடும்பாட்டைச் சகிக்கமாட்டாதவளாய்க் கீழிறங்கிப் படகை தயார்செய்தாள். காற்றின் கோஷ்டத்தால் அலைகள் மலைபோ லெழும்பியபடியால் தாயுந் தகப்பனும் படகில் போவது மரணத்துக்கு ஏதுவாகும் என்று சொல்லித் தடுக்கப் பார்த்தார்கள். அவளோ என் தகப்பன் கூடப் போகாவிட்டால் நான் தனியே போய் அவர்களை இரட்சிக்கப் பார்ப்பேன் என்றாள். அவளுடைய நல்ல நோக்கத்தையும் மாற்றப்படக்கூடா தீர்மானத்தையுங் கண்டறிந்த தகப்பன் அவள்கூடப் போனான்; இருவரும் துடுப்பைக் கையில் பிடித்தவர்களாய், காற்றோடும் அலைகளோடும் போராடி, தண்டு வலித்துச் சென்று, ஒன்பது பேரையும் தங்கள் படகில் ஏற்

றிக்கொண்டு, தாங்கள் குடியிருந்த தீபஸ்தம்ப வீட்டில் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

கிரேஸ் டார்லிங் என்ற பெண்ணின் வீரச் செய்கை அயல் தேசங்களில் மாத்திரமல்ல, உலகமெங்கும் சீக்கிரம் பரவினது. தயாளமுள்ள பலர் அவளுக்குப் பணமும் வெகுமதிகளும் அனுப்பினார்கள்; அநேகர் அவளைப் பார்க்கத் தூரமான இடங்களிலிருந்து போனார்கள். அவள் நான்கு வருஷங்கள் மாத்திரம் உயிருடனிருந்து தன் ஆஸ்தியையும் கீர்த்தியையும் அநுபவித்தாள். அவள் மரித்து, தன் வீரச் செய்கையை ஞாபகப்படுத்தும் இடத்துக் கருகில் அடக்கஞ் செய்யப்பட்டாள்.

குறிப்பு:—மாணாக்கர் இந்தக் கதையைச் சுருக்கி, தங்கள் சொந்த வார்த்தைகளைக்கொண்டு அழகாய் எழுதட்டும். பாஷை நடை, எழுத்துப் பிழை, கையெழுத்து முதலியவைகள் திருத்தப்படவேண்டும். மாணாக்கர் கிரேஸ் டார்லிங் போல் சுத்த வீரர்களாக ஏவப்படவேண்டும்.

## பாடம் 20. தங்கப் பிரமாணத்தைக் கைக்கொண்ட சிறுவன். உ௰.

லண்டன்மா நகரில் யோசேப்பு என்ற சிறுவன் ஒருவன் ஒருபவுன் நோட்டை எடுத்துக்கொண்டு, சில்லறை மாற்ற ஒரு ஷாப்புக்குப் போனான். அங்கிருந்தவன் நோட்டை வாங்கிக்கொண்டு சில்லறைக் காசுகள் கொடுத்தான். அப்போது மாலை மயங்குகிற நேரமாகையால், தெரியாமல், வெள்ளி ஷிலிங் ஒன்றுக்குப்பதில் தங்கப் பவுன் ஒன்றைக் கொடுத்துவிட்டான். யோசேப்பு அவனை நம்பி சில்லறைக்

காசுகளை எண்ணிப் பாராமல், ஒரு காகிதத்தில் மடித்து வீட்டுக்குக் கொண்டு வந்தான்.

வீட்டில், விளக்கு வெளிச்சத்தில் திறந்து பார்த்து, ஷிலிங்குக்குப் பதில் தங்கப் பவுன் இருப்பதைக் கண்டு, அதை அபகரித்துக்கொள்ள மனவற்றவனாய், ஒரே ஓட்டமாய் ஷாப்புக்கு ஓடினான். ஷாப்பிலிருந்தவன் நீ வியர்க்க வியர்க்க ஓடிவந்த காரணம் என்ன என்று விசாரித்தான். யோசேப்பு: நீ சில்லறை சரியாய்க் கொடுக்கவில்லை என்றான். அவனோ, கோபித்தெழும்பி: நான் சரியாய்க் கொடுத்தேன், நீ என்னை ஏமாற்ற வந்தாயோ? என்றான். யோசேப்பு; எனக்கு ஒன்றுங் குறையவில்லை. ஆனால் நீ தெரியாமல் தப்புச் செய்திருக்கிறாய் என்று சொல்லி காரியத்தை வெளிப்படுத்துகையில், அவன் கோபத்தால் அதை விளங்கிக் கொள்ளவில்லை.

சத்தத்தைக்கேட்டு, ஷாப்புக்கு எஜமானாகிய துரை மேல் வீட்டிலிருந்து இறங்கி வந்து, பையனைப் பார்த்து: ஏன் இந்தப் பேரிரைச்சல்? என்றார். அதற்குப் பையன்: ஐயா, நான் சண்டைபோட வரவில்லை; இருட்டில் தெரியாமல் கொடுத்த தங்கப் பவுனுக்குப் பதில் வெள்ளி ஷிலிங் வாங்கிக்கொண்டு போக வந்தேன்; தயவுசெய்து இந்தப் பெரிய நாணயத்தை வாங்கிக்கொண்டு, எனக்கு உரிய வெள்ளி நாணயத்தைக் கொடுங்கள் என்றான். துரைக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. அவர் அவனைப் பார்த்து: நீ மகா ஏழையாய்க் காணப்படுகிறாய். இருபது மடங்கு பெரிதான இந்தத் தங்க நாணயத்தைக் கொடுத்து விட உனக்கு மனம் எப்படி வந்தது? என்றார்.

யோசேப்பு, துரையை நோக்கி: ஐயா, "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற தங்கப் பிரமாணத்தை நான் சிறிவனுயிருக்கையில் எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள்; அதின்படி செய்யப்பார்க்கிறேன்; நான் தெரியாமல் வெள்ளிக் காசுக்குப் பதில் தங்கக் காசைக் கொடுத்துவிட்டால், அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்புவேன் அல்லவா? தயவுசெய்து இந்தத் தங்கக் காசைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்ருன். அவர் அதை வாங்கிக்கொண்டு, அவனுக்குரிய வெள்ளி ஷிலிங்கைக் கொடுத்தார்.

அவன் சலாஞ்செய்து வீட்டுக்குத் திரும்பிப் போகையில், துரை அவனை நோக்கி: நீ உண்மையுள்ளவன்; உன்னைப் போன்றவர்கள்தான் எனக்குத் தேவை; உன் பெற்ருேர்களுக்கு இஷ்டமானல் நாளைக்கு இங்கு வா. நான் உத்தியோகந் தருவேன் என்ருர். அவன் அப்படியே தன் பெற்ருேரிடம் உத்தரவு பெற்று துரையண்டை உத்தியோகத்தில் அமர்ந்தான். வெள்ளி நாணயத்துக்குப் பதில் தங்க நாணயத்தைத் தப்பாய்க் கொடுத்தவனும் அவன்மேல் அன்பு கூர்ந்து, அவனுக்கு வாசிக்க, எழுதக் கற்றுக் கொடுத்தான்.

குறிப்பு:—உபாத்தியாயர் இந்தக் கதை விஷயமாய்ப் பல கேள்விகள் கேட்டு, மாணுக்கரை யோக்கியமாய் நடக்க ஏவி, இதைச் சுருக்கி எழுதச் செய்து, மாணுக்கர் எழுதினதைத் திருத்தவேண்டும்.

## பாடம் 21. விநோத மேல்விலாசமும் உயக. விநோத கடிதமும்.

அமெரிக்கா கண்டத்து ஐக்கியமாகாணங்கள் ஒன்றின் தலைநகரத்து தபாற் பெட்டியில் ஒரு விநோத கடிதம் கிடந்தது. அதில்: பரமலோகத்துக்குக் குடிபோயிருக்கும் அருமைத் தாயாருக்கு என்ற மேல்விலாசம் எழுதப்பட்டு, தபால் முத்திரையும் ஒட்டப்பட்டிருந்தது. தபாற் சேவகன் அதை யாருக்குக் கொடுக்கிறதென்று தெரியாமல் திகைத்து, பீற்றர்சன் என்ற தபாற் தலைவருக்குக் காட்டினான். எல்லாராலும் மதிக்கப்பட்ட அந்தத் துரை விநோத மேல்விலாசத்தைப் பார்த்துப் புன்னகைகொண்டு அந்தக் கடிதத்தைக் திறந்து வாசித்தார். அதில் எழுதியிருந்ததாவது: என் அருமைத்தாயே, நீங்கள் பரலோகத்துக்குக் குடிபோனதுமுதல் நான் திக்கற்ற பிள்ளையாய் இருக்கிறேன். என்னை ஆதரிக்கிற அம்மாளுடைய புருஷன் போனவாரம் இறந்துபோனார். அவரை நீங்கள் பரலோகத்தில் சந்தித்திருப்பீர்கள். நாங்கள் இப்போது பெரிய தெருவை விட்டு, கோணல் சந்தில் உள்ள சிறிய வீட்டின் பின்கட்டில் குடியிருக்கிறோம். இந்தக்கடிதத்தை நமது நல்லஇரட்சகருக்குக் காட்டி, என்னை அழைத்துக்கொள்ளச் சொல்லுங்கள். நான் உங்களோடு இருக்க ஆசைப்படுகிறேன். மோட்சம் சிங்காரமாயும் சந்தோஷமாயும் இருக்கவேண்டுமே. மற்றப்படி நீங்கள் இதற்குள் திரும்பியிருப்பீர்கள். இங்கு நான் சாப்பாட்டுக்குப் படும் கஷ்டம் கொஞ்சமல்ல ; கோணல் சந்தில் கிளம்பும் துர் நாற்றத்தை நீங்கள் சகிக்கமாட்டீர்கள். என்

கேஞ்சுதலுக்கு இரங்கி என்னைச் சீக்கிரம் அழைத்துக் கொள்ளுங்கள். இப்படிக்கு, உங்களுக்கு ஆயிரம் முத்தி கொடுக்கிற உங்கள் அன்புள்ள குமாரத்தி, டோராள்.

துரை கடிதத்தை வாசித்தபோது கேட்டுக்கொண்டிருந்த சேவகன் விம்மி விம்மி அழுதான். இவனுக்கு நான்கு பிள்ளைகளுண்டு. பிள்ளையில்லா அத்துரையின் கண்களும் கலங்கின. அவர் சேவகனைக் கோணற் சந்துக்கு அனுப்பி, அந்தச் சிறுமியை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார். பத்து வயதுள்ள டோராள் உயர்தர வஸ்திரம் அணிந்திரா விட்டாலும் சுசிகரமாயிருந்தாள். அவள் துரையை நோக்கி ஐயா, என் தாயிடமிருந்து செய்தி வந்திருக்கிறது நிச்சயந் தானா? அவர்கள் என்னை எப்போது அழைத்துக்கொள்ளப்போகிறார்கள்? என்று இனிய குரலோடு கேட்டாள். அதற்கு அவர்: என் கண்மணியே, உன் தாயார் கடிதம் வந்திருக்கிறது; பரலோகத்தில் இடம் இப்போது காலியில்லையாம் என்று மலர்ந்த முகத்துடன் சொன்னார். அவளோ சற்று நேரஞ் சத்தமிட்டு அழுது: ஆ சுவாமி, நான் எவ்வளவு நிர்ப்பாக்கியமான பிள்ளை என்று சொல்லி பெருமூச்சு விட்டாள்.

துரை அவளை நோக்கி: நீ அப்படி நினையாதே; உன் பாக்கியத்துக்குக் குறைவில்லை; பரமலோகத்தில் இடம் காலியாகும்வரை நீ என்னிடத்தில் இருக்கவேண்டுமாம்; உனக்குச் சம்மதந்தானா? என்றார். அதற்கு அவள்: என் தாயாருக்குச் சம்மதமானல் எனக்குஞ் சம்மதம் என்றாள். அவர்: அது உன் தாயாருக்குச் சம்மதம்; கடவுளும் அதற்கு முத்திரை போட்டிருக்கிறார். இன்றுமுதல் நீ

என் குமாரத்தி என்றார். டோராள் இராஜ மாளிகை போன்ற அவ்வீட்டில் துரைக்கும் துரைசானிக்கும் பிள்ளையாகி, சம்பிரமமாய் வாழ்ந்தாள்.

குறிப்பு:—இந்தக் கதையை மாணுக்கர் சுருக்கி, தங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதட்டும். தபாற்சேவகன் அழுததற்கும், துரையின் கண்கள் கலங்கினதற்கும் காரணம் என்னவென்றுகேட்டு தங்கள்மேல் கவலையாய் இருக்கும் பரம பிதா ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் ஆதரவற்றவர்களைக் கைவிடார் என்றும் கண்டுகொள்ளச் செய்யவேண்டும்.

## பாடம் 22. உலோபி. உ஡உ.

என்னென்ன நாணயங்கள் பார்த்திருக்கிறீர்கள்? செம்பு நாணயம், நிக்கல் நாணயம், வெள்ளி நாணயம், தங்க நாணயம் என்ற நான்கு வகை நாணயங்கள் பார்த்திருக்கிறோம்.

எதற்குச் செம்பு நாணயம் என்று பெயர்? செம்பு என்ற உலோகத்தால் செய்யப்பட்ட தம்படி, கால் அணு, அரை அணு முதலியவைகளுக்குச் செம்பு நாணயங்கள் என்று பெயர்.

நாணயங்களைக் கையாடுகிற விஷயத்தில் மனுஷரை மூன்று பிரிவினராய்ப் பிரிக்கலாம்; அவர்கள் யார்? கால் காசும் செலவழியாதவன் பிசினி, நாணயங்களைக் கண்டபடி வாரி யிறைக்கிறவன் இடம்பாச்சாரி, நாணயங்களை மட்டாய் நல் விஷயங்களில் செலவழிக்கிறவன் நாணயஸ்தன்.

இவைகளை உலோபி, ஊதாரி, உதாரி என்றுஞ் சொல்லலாம். நான் சொல்லும் உலோபி கதையைக் கேட்டு, அதை உங்கள் சொந்த வார்த்தைகளில் அழகாய் எழுதுங்கள்.

உருஷியா தேசத்தில் ஓர் உலோபி இருந்தான்; அவன் சக்கரவர்த்திக்குக் கோடி கோடியாய்க் கடன் கொடுத்தான்; அவன் எந்தக் காலத்திலாவது பசியடங்கச் சாப்பிட்டவனல்ல. தன் வீட்டைக் காக்கும் நாய் செத்துப்போனபோது, வேறொரு நாய் வாங்க மனமற்றவனாய் தானே இரவெல்லாம் நாய்போல் தன் வீட்டைச் சுற்றிக் குலைத்துக்கொண்டிருந்தான்.

இங்கிலாந்தில் ஒரு உலோபி இருந்தான்; இவனுக்குத் திரளான வெள்ளி பொன் இருந்தன. ஒரே தொப்பியை இருபது வருஷம்போட்டுக்கொண்டிருந்ததன்றி ஒரு ஷிலிங்குக்கு வாங்கின புதுத் தொப்பியை அணியாமல் ஒன்றரை ஷிலிங்குக்கு அதை விற்றுப் பணமாக்கினான். ஒரேவிளக்கு இருந்த போதிலும் அதையுங் கொளுத்துவது அரிது. வெயில் எரிக்கும் நாள் பார்த்து ஸ்நானஞ் செய்து, வெயிலில் நின்று தன் தேகத்தை உலரச் செய்வான். இவன் மரித்தபோது இவன் வீட்டின் பல பக்கங்களில் பொன் நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் புதைக்கப் பட்டிருக்கக் கண்டார்கள்.

## செய்யுள்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகாளந்தப் பணம்.

## பாடம் 23. ஊதாரி. உ௰ௗ.

உலோபித்தனம் நல்ல குணமா ? உலோபத்துவம் நல்ல குணமல்ல. உலோபி தனக்கும் பிரயோஜனம் உள்ளவன் அல்ல; அவன் தன் ஆயுள் காலத்தில் பிறருக்கும் பிரயோஜனமுள்ளவன் அல்ல.

ஊதாரி எப்படிப்பட்டவன்? இவன் பிறருக்கு உதாரி போல் காணப்பட்டாலும் உண்மையில் உதாரி அல்ல. சீக்கிரம் ஆஸ்தியை யெல்லாஞ் செலவழித்து, கடனில் அகப்பட்டு, பிறருக்குப் பாரமாயிருப்பான்.

ஓர் ஊதாரியின் சரித்திரத்தைக் கேளுங்கள்.

ஒரு ஆஸ்திக்காரனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்குவரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தான்

சில நாளைக்குப் பின்பு, இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூர தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.

எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

தகப்பன் தன் ஊதாரி மகனை வீட்டில் கட்டிவைத்திருக்கப்படாதா? ஏன் அவனை இஷ்டப்படி அனுப்பிவிட்டான்? அவன் கட்டுக்குள் அடங்கத்தக்க சிறுவன் அல்ல; அவன் இருதயம் வீட்டுக்கு வெளியே இருக்கையில் அவன் சரீரத்தை வீட்டுக்குள் கட்டிவைக்கிறதில் இலாபம் என்ன?

பன்றி தின்னும் தவிடுகூட அவன் பசியை ஆற்றக் கிடையாதபோது எப்படி இருந்திருப்பான்? "அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்" என்ற பழமொழிப்படி

அவன் அக்கிரமங்கள் எல்லாம் ஒழிந்துபோக, அவன் தன் தகப்பன் கால்மாட்டில்போய் விழுந்திருப்பான்.

தகப்பன் இந்தத் துன்மார்க்கனைத் திரும்பத் தன் வீட்டில் சேர்த்துக்கொள்வானா? "பெற்றோன் மனம் மெழுகு, பிள்ளை மனம் கல்" என்பது மெய்யானால், கல் நெஞ்சனாயிருந்த மகனே காலில்வந்து விழுகையில், பெற்ற தகப்பன் மனம் உருகாதா?

## பாடம் 24. உதாரி உ௰௪.

"பணம் என்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்ற பழமொழி வழங்குவதேன்? மனுஷரெல்லாருக்கும் பணத்தின்மேல் ஆசை உண்டென்பதைக் காட்ட இந்தப் பழமொழி வழங்குகிறது; பணமில்லாமல் நாம் ஜீவிக்க முடியாது; எல்லாவற்றிற்கும் பணம் வேண்டியதாய் இருக்கிறது; அதனால்தான் "பணம் இல்லாதவன் நடைப் பிணம்" என்கிற பழமொழியும் வழங்குகிறது.

பணம் அவசியமென்பது சரிதான்; ஆனால் பண ஆசை நல்ல குணமா? "பண ஆசை எல்லாத் தீமைகளுக்கும் வேர்" என்பதை அறியீர்களோ? நீங்கள் படகின்மேல் உட்கார்ந்திருந்தால் ஆற்றைக் கடக்கலாம்; படகின் கீழிருந்து ஆற்றைக் கடக்கக் கூடுமோ? ஜலத்தின்மேல் படகு இருந்தால் அது ஆற்றைக் கடந்து செல்லும்; ஜலம் படகுக்குள் வந்தால் என்ன சம்பவிக்கும்?

நீங்கள் சொல்லுகிறது எங்களுக்கு விளங்குகிறது ஐயா. எங்களுக்குப் பணம் அவசியம், என்றாலும் பண

ஆசை இருக்கப்படாது. பண ஆசையினால் ஒருவன் ஓர் பிள்ளையைக் கொன்றுபோட்டான்; சகோதரர் நியாயஸ் தலம் ஏறுவதும் பண ஆசையினால்தான்.

நீங்கள் யாரைப்போல் இருக்க விரும்புகிறீர்கள்? உலோபியைப் போலா? ஊதாரியைப் போலா? நாங்கள் உலோபியைப்போல் பிசினித்தனம் பண்ணி, பணத்தைப் புதைத்து வைத்து, பிறருக்கு அதை விட்டுப்போக மாட்டோம்; ஊதாரியைப்போல பெற்றோர் சம்பாத்தியத்தையுஞ் செலவழித்து, கடனில் அகப்பட்டு, பிறருக்குப் பாரமாய் இருக்கமாட்டோம். ஆனால், கஷ்டப்பட்டுச் சம்பாதித்து, நன்றாய் உண்டு உடுத்தி, கண்டு களித்து வாழ்ந்திருப்போம்.

—நீங்கள் மாத்திரம் அநுபவித்தால்—
—போதுமா? சிக்கெனவைக் கையாடி, அவ—
—சியமானவைகளுக்குத் தாராளமாய்ச் செல—
—வழித்து, தன்னயமின்றி உதார குண—
—முள்ளவர்களாய் வறுமையில் இருப்போ—
—ருக்கு நீங்கள் உதவிசெய்ய வேண்டாமோ?—
—மழையும் வெயிலும் சுகமும் பணங்—
—கொடுத்து வாங்குகிறீர்களா? அவைகளை—
—உங்களுக்குக் கொடுக்கிறவர் யார்?—

கடவுளை உதாரி என்று சொல்வதற்காக பாடத்தின் தலைப்பில் உதாரி என்று அச்சிட்டு இருக்கிறதோ ஐயா? அல்ல, அல்ல; நீங்கள் உதாரிகள் ஆக வேண்டுமென்றே இந்தப் பாடத்துக்கு உதாரி என்கிற பெயர் கொடுத்திருக்

கிறது. கடவுள் இரங்கி, நல்லோருக்கும் பொல்லாதவர்களுக்கும் நன்மை செய்வதுபோல், நீங்களும் பிறருக்கு இரங்கி, நன்மைசெய்து உதாரி என்கிற நல்ல பெயர் பெறுங்கள். பண ஆசையைக் கட்டோடொழியுங்கள்.

## பாடம் 25. பர்நெல் அம்மாள். உமிடு.

அநேக வருஷங்களுக்கு முன்னே மதுராபுரிக்கு அருகில் இருக்கும் மேலூர் என்ற கிராமத்தில் பர்நேல் என்ற பேருடைய ஓர் துரைசானி இருந்தார்கள். அவர்கள் பல பிள்ளைகள் பெற்றவர்களாயினும் அடிக்கடி கண்ணீர்விட்டு அழுவது வழக்கம். விசேஷமாய் யாராவது பொய் சொல்வதைக் கேட்டார்களானல் அழாதிருக்கமாட்டார்கள். இதற்குக் காரணம் என்ன?

இவர்கள் அமெரிக்காவில் ஏழு வயதுப் பிள்ளையாய் இருக்கையில் அடுத்த வீட்டுத் தாழ்வாரத்தில் கண்டெடுத்த நீண்ட குண்டூசியைத் தன் தாயிடத்தில் கொண்டுபோய் தாழ்வாரத்துக்குக் கீழே கண்டெடுத்ததாகப் பொய்சொன்னார்கள். தாயார் அதை நம்பினாலும் குண்டூசியை அடுத்த வீட்டு அம்மாளிடம் கொடு என்றார்கள். அதை வைத்துக்கொள்ளத் தனக்குத் தணியா ஆசை இருந்தபோதிலும் தாய்க்குக் கீழ்ப்படிந்து கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அடுத்த வீட்டு அம்மாள் உண்மைக்காக வியந்து பேசி, அந்தக் குண்டூசியை இனமாகக் கொடுத்துவிட்டார்கள். இந்த அம்மாள் குதித்துக்கொண்டு தன் தாயிடம் ஓடி நடந்ததைச் சொன்னார்கள்.

தாயார் இந்த அம்மாளைப் பார்த்து: சொந்தக்காரர் குண்டூசியை உனக்குக் கொடுத்துவிட்டபடியால் நீ அதை இப்போது வைத்துக்கொள்ளலாம்; யாரும் அதை வேண்டாம் என்று தெருவில் எறிய மாட்டார்கள், அது கை தவறி வெளியே விழுந்தபடியால் அதையெடுத்த நீ அதைச் சொந்தக்காரருக்குக் கொண்டுபோனது சரியே என்றார்கள்.

இந்த அம்மாள் பதின்மூன்று வயதாயிருக்கையில் குணப்பட்டு, தாழ்வாரத்தில் கிடந்தெடுத்த குண்டூசியைத் தாழ்வாரத்துக்கு வெளியே கண்டெடுத்தேன் என்று சொன்ன பொய்யைக் கடவுளிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டார்கள். ஆனால் தான் பொய் சொன்னது தன் தாயிடமாகையால் தன் தாயிடம் மன்னிப்புக் கேட்க ஆசைப்பட்டார்கள். தாயோ கொஞ்சகாலத்துக்கு முன்னே மரித்துப்போனார்கள். தன் தாயைக் கண்டு மன்னிப்புக் கேட்கும் வரையில் தன் பொய்யை மறக்க முடியவில்லை. ஆதலால் மிஷனெரியா யிருக்கையிலும் தான் மரித்து, உயிர்த்தெழுந்து, தன் தாயைச் சந்திக்கும் நாள் எப்போது வருமோ வென்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்கள்.

பிறர் காணாமற் போட்டதை நாம் கண்டெடுத்தால் அதை வைத்துக் கொள்வது தப்பா? நீ காணாமற்போட்டதை வேறொருவன் எடுத்தால் அவன் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்? பர்நெல் அம்மாளை எதற்காகப் புகழ்வாய்?

## செய்யுள்.

### ஔவையார் பாடிய மூதுரை.

1. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

2. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

3. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

4. அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு.

5. சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகுஞ்—சீரிய [கும்
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னா
மண்ணின் குடமுடைந்தக் கால்.

6. இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

7. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப் [த்து
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே-விற்பிடி
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

8. நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

9. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

10. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

ஔவையார் பாடிய நல்வழி.

11. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி.

12. உள்ள தொழிய வொருவர்க் கொருவர் சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரை யேறினலென்
உடலோடு வாழு முயிர்க்கு.

13. எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினு லாங்கமல நீர்போற்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

14. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டு—மேற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராளுலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

15. ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக் கென்னென் றிட்டுண்டிரும்.

16. தண்ணீர்நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாருக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்ருல் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

17. பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்

178148

காவிதான் போயின்பின் பாரே யனுபவிப்பார்
பாவிகாளந்தப் பணம்.

18. உண்பது நாழி யுடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன—கண்புதைந்
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம் போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான். [த்தி

19. வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வே
பட்டுருவுங் கோல் பஞ்சிற் பாயாது-நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்குவிடும்.

20. பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

கேள்விகள்:—1. மூதுரை என்றால் அருதத மென்
அதற்கு வேறு என்ன பெயர் வழங்குகிறது? அதைச் செய்த
யவர் யார்? 2. மரத்தின் தன்மை யென்ன? அதிலிருந்
கற்றுக்கொள்ளும் நீதி யென்ன? 3. யார் மரத்துக்கு ஒ
எது ஜலத்தின்மேல் எழுதிய அச்சரம்? 4. யார் உறவி
என்று சொல்லும் பாட்டையும், மனையாள்விஷயமாய்ப் பே
பாட்டையும் எழுதுக.

5. நல்வழி என்ற பெயர் இப்பாடல்களுக்குக் கொடு
பட்டதேன்? 6. ஆற்றின் தன்மை யென்ன? அது உ
குக் கற்பிப்பதென்ன? 7. பெண்ணின் தன்மையை எதி
அறியலாம்? கண்ணின் தன்மையை எதினல் அறியல
8. இறந்தோர்க்கழல் வீண் என்ற பாட்டையும், சாந்
சொற்களே ஜெயிக்கும் என்ற பாட்டையும் எழுது. 9.
தடி, ஆண்டு, கற்பு, ஆறு—இவை பல பொருள் தர
வேறு வாக்கியங்களில் வைத்து எழுது. 10. உவமானப்
மேயம் என்றால் என்ன? உதாரணங்களால் விளக்கு.

# PARADISE BIRD'S PUBLICATIONS

| I. RELIGIOUS BOOKS, TAMIL. | Rs. | A. | P. |
|---|---|---|---|
| 1. Paradise within the Thorn Hedge: To the Afflicted | 0 | 6 | 0 |
| 2. Hero who conquered the Devil ... ... | 0 | 1 | 0 |
| 3. Evangelist's Javelin : For Catechists & Biblewomen | 0 | 3 | 0 |
| 4. Celestial Songs : Sunday School Lessons, 5 Books | 0 | 6 | 0 |
| 5. **SAVIOUR** of the World : Songs, Sunday Lessons | 0 | 2 | 0 |
| 6. Gospel of John : Songs, Sunday School Lessons | 0 | 2 | 0 |
| 7. Sermons & Songs on Seven words from Cross ... | 0 | 4 | 0 |
| 8. Missing Rib with Songs for Brides & Grooms ... | 0 | 4 | 0 |
| 9. **LORD'S** Cash Book to teach Tithe-giving ... | 0 | 1 | 0 |
| 10. Sweet Scented Garland : For Grand-Children ... | 0 | 2 | 0 |
| **II. SCHOOL BOOKS, TAMIL.** | | | |
| 1. Domestic Economy : Approved Text ... ... | 1 | 0 | 0 |
| 2. Domestic Hygiene : Approved ... ... | 0 | 6 | 0 |
| 3. Domestic Medical Science : Approved ... ... | 0 | 6 | 0 |
| 4. Domestic Temperance Science ... ... | 0 | 4 | 0 |
| 5. First Book : Approved Text ... ... ... | 0 | 2 | 6 |
| 6. Second Book, Direct Method ... ... ... | 0 | 3 | 0 |
| 7. Third Book, Direct Method : Approved Text ... | 0 | 4 | 0 |
| 8. Fourth Book, Direct Method : For Composition ... | 0 | 5 | 0 |
| 9. Fifth Book, Direct Method : Approved Text ... | 0 | 6 | 0 |
| 10. Grammar, Direct Method : Elementary, Approved T. | 0 | 6 | 0 |
| 11. Grammar, Direct Method: Secondary Approved T. | 0 | 8 | 0 |
| 12. Geography, III, IV Standards : Approved Text ... | 0 | 3 | 0 |
| 13. Geography, V Standard ... ... ... | 0 | 6 | 0 |
| 14. Geography of the World : Elementary Schools ... | 0 | 8 | 0 |
| 15. History of India : Elementary Schools ... ... | 0 | 8 | 0 |
| 16. Civics : For Elementary Schools : Approved ... | 0 | 5 | 0 |
| 17. Arithmetical Tables ... ... ... ... | 0 | 0 | 6 |
| **III. ENGLISH BOOKS.** | | | |
| 1. My Conception of a Lady ... ... ... | 0 | 2 | 6 |
| 2. My Conception of a Gentleman ... ... ... | 0 | 2 | 6 |
| 3. Rai Bahadur Gnaniyar Nadar ... ... ... | 0 | 8 | 0 |
| 4. Donatios, the Boy Preacher ... ... ... | 0 | 2 | 0 |
| 5. The Pet Bird of the Paradise Bird ... ... | 0 | 3 | 0 |
| 6. An Epistle of the Paradise Bird ... .. | 0 | 1 | 0 |
| 7. Sweet Scented Garland : Epistles to Grand-Children | 0 | 2 | 6 |
| 8. Grammar, Direct Method : Approved ... ... | 0 | 6 | 0 |
| 9. *Book "I,"* Autobiography of Paradise Bird : 640 pages, 121 pictures, ... ... ... | 3 | 0 | 0 |
| **IV. TELUGU BOOKS.** | | | |
| 1. Songs on 7 Words from Cross and on 9 Flowers ... | 0 | 1 | 3 |
| 2. Grammar, Direct Method : In preparation. | | | |
| 3. First Book : In preparation. | | | |



**Y. G. BONNELL, P.B.,**
**Paradise Lodge, Royapuram,**
**MADRAS.**